Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 8 யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 10 ஆம் நாள் ஜ. ஆகிர் 16 (25-11-61) சனிக்கிழமை இதழ் 243

நாவிற்கு ருசியும் .
உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொனரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா.

பார்லிமெண்டில்

# கூச்சலும் குழப்பமும்

## அவசரகாலத்தீர்மானம்: வாக்கெடுப்பு தகராறு

### கூட்டம் 15 நிமிடம் ஒத்திவைப்பு

கொழும்பு, வெள்ளி

அவசர காலச்சட்டத்தை உடனே வாபஸ் பெற வேண்டுமென்ற பிரேரணைக்கு வாக்கெடுப்பு நடைபெற வேண்டுமென்று தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி எம். பி. க்களும் மற்றும் எதிர்க்கட்சி எம். பி. க்களும் கூறியதன் பேரில் சபா நாயகர் வாக்கெடுப்புக்கு விட்டார்.

ஆனல் இதற்கு அரசாங்க எம். பி. க்கள் சம்மதிக்க வில்லை. இதைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையில் வாக்குவாதமும் கூச்சலும் கிளம்பியது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில், "இக்கேடுகெட்ட" அரசாங்கம் வாக்கெடுப்பதற்கு பயப்படுகிறது என்று கூறினர். அரசாங்க எம். பி. க்கள் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறியதை வாபஸ் பெறுமாறு கேட்டார்கள்.

ஆனல் எதிர்க் கட்சியினர் இதற்கு சம்மதிக்காது வாக்கெடுப்புக்கு விடுமாறு வற்புறுத்தினர்கள்.

அப்பொழுது பார்லிமெண்டில் மீண்டும் குழப்பநிலை ஏற்பட்டது.

சபாநாயகர் அமைதியாக இருக்குமாறு கேட்டு பார்லிமெண்டை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

இதன் பின்னர் திரு. சிறிவர்தன தமது பிரேரணையை சமர்ப்பித்தார். திரு. ஏ. அமிர்தலிங்கம் இதை வாக்கெடுப்புக்குவிடுமாறு கோரினர்.

பார்லிமெண்ட் சபைக் கூட்டம் பின்னர் தீர்மானம் பற்றி வாக்கெடுக்காமலே, டிசம்பர் 12-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

### பொருளாதார நெருக்கடியே அவசரகாலநீடிப்புக்கு காரணம்

—திரு. டட்லி

"தமிழ்ப பகுதிகளில் இப்பொழுது நெருக்கடியான நிலைமையொன்றுமில்லை. இந்தநிலையில் அவசரகால நிலைமை அவசியமேயில்லை.பொருளாதார நெருக்கடி காரணமாகவே அரசாங்கம் அவசரகால நிலைமையைக் கடந்த 7 மாதங்களாக நீடித்துவந்துள்ளது."

இவ்வாறு அவசரகாலச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு தடைசெய்யப்பட்ட தமிழரசுக்கட்சி கொண்டுவந்த பிரேரணையைத் தொடர்ந்து விவாதிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா குறிப்பிட்டார்.

திரு. டட்லி தொடர்ந்து பேசியதாவது:

தமிழரசுக்கட்சியினருக்கு மந்திரிப்பதவியளிப்பதாக யு.என். பி. என்றுமே உறுதியளிக்கவில்லை. அக் கட்சியின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவற்றை அமுல் நடத்தமுடியாதுஎன்று யு.என். பி. தமிழரசுக் கட்சியினரிடம் தெரிவித்தது.

### நிதிமந்திரி சர்வாதிகாரியல்ல

—கலாசார மந்திரி

நிதிமந்திரி ஒரு சர்வாதிகாரி போல நடந்துகொள்கிருர் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். ஆனல் நிதிமந்திரி சர்வாதிகாரி போன்று நடந்துகொள்ளவில்லை என கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

அரசாங்கம் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் துரோகம் செய்து விட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறு. பொதுமக்களைத் தவருன வழியில் செல்லத் தூண்டுவதற்காகவே இவ்விதம் கூறப்படுகிறது.

தமிழரசுக் கட்சிக்கு சாதகமாக எதுவித உறுதியையும் சுதந்திரக் கட்சி என்றும் அளிக்கவில்லை.

பிரதேச சபைகள் அமைப்பது பற்றி மந்திரி குறிப்பிட்டுப் பேசுகையில், கச்சேரி முறையை மாற்றியமைக்கவே இவ்வித திட்டம் ஆலோசிக்கப்பட்டதென்றும் பிரதேச சபைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல இலங்கை பூராவுமே அமைக்க ஆலோசிக்கப்பட்டது என்றும் கூறினர்.

### ராணுவம் கொடுமை செய்கிறது

—திரு. பிலிப்

'அவசரகால நிலையை நீடித்துவைத்திருப்பதற்கு ஒரு வித நியாயமுமில்லை. வடக்குகிழக்கு மாகாணங்களில் ராணுவம் கொடுமை செய்கிறது' என திரு. பிலிப் குணவர்த்தன கூறினர்.

## குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இலங்கை வருகின்ருர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்னை, குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவரும் குழந்தைக் கவிஞருமான திரு. அழ. வள்ளியப்பா 26-11-61 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் விமான மூலமாகக் கொழும்பு வந்து சேருகின்ருர். கொழும்பில் மூன்று வாரங்கள் நடைபெறும் யுனெஸ்கோ கருத்தரங்கில் இந்தியாவின் பிரதிநிதியாக இவர் கலந்துகொள்வார் எனத் தெரிகிறது.

## பண்ணைக் கடலுள் பஸ் பாய்ந்தது

யாழ்ப்பாணம், சனி

நேற்று மாலை 4 மணி யளவில் பண்ணைத்துறை பாலம் வழியாக ஊர்காவற்றுறை சென்று கொண்டிருந்த பஸ் பண்ணைத் துறையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் பாதை விலகி கடலுள் பாய்ந்தது.

இதனல் தீவுப் பகுதி பஸ் போக்குவரத்து தடைபட்டது. உயிர்ச்சேதமெதுவுமில்லை.

## இலட்சுமித் தோட்ட விசாரணை

## 'வேகமாக வீசும் கல்லால் துப்பாக்கி வெடிக்கும்'

### இராணுவ அதிகாரி கூறியசாட்சியம்

கொழும்பு, வெள்ளி

இலட்சுமித் தோட்ட கமிஷன் விசாரணை இன்று மீண்டும் ஆரம்பமானபோது, இராணுவத்தைச் சேர்ந்த காப்டன் பெர்னண்டோ கூறியதாவது:-

தோட்டாக்கள் நிறைந்த துப்பாக்கி ஒரு கல்பட்டு வெடிக்க வேண்டுமானல் அந்தக் கல் மிக வேகமாக வீசப்பட்டிருக்க வேண்டும் என்று கூறி இதை துப்பாக்கியைக் கொண்டு நேரில் காட்டினர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

அரசாங்க வழக்கறிஞர் சாம். விஜயசிங்கா சாட்சியை ஒரு கேள்வி கேட்டு சாட்சி பதிலளித்துக்கொண்டிருக்கையில் ஜி. ஜி. யும் தலையிட்டு ஏதோ கேட்கவே சாம். விஜயசிங்கா இதை ஆட்சேபித்து தாம் வெளியேறுவதாகச் சொன்னர்.

திரு ஜி. ஜி.: நாம் எல்லோருமே வெளியேறிவிடலாமே.

இ. தொ. கா. உதவிப் பொதுக்காரியதரிசி திரு. ஆர். அருணசலம் பின் அளித்த சாட்சியத்தில் கூறியதாவது -

1954-ம் வருடம் டிசம்பர் மாதம் 4-ம் தேதி இலட்சுமித் தோட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. மாலையில் மாஜிஸ்டிரேட் விசாரணை நடக்கையில் நான் அங்கு சென்றேன். டிசம்பர் மாதம் 18-ல் நடந்த மகாநாட்டில் நானும் கலந்து கொண்டேன். அதில் தொழில் இலாகா முதலாளிமார் பெடரேஷன், தொழிலாளர் யூனியன் இவர்களது பிரதிநிதிகள் பங்கு பற்றினர். கருங்காலித் தொழிலாளரை நீக்கவேண்டுமென்று எங்கள் யூனியன் வற்புறுத்தியது.

[திங்கட்கிழமையன்று திரு. ஹார்வி மீண்டும் சாட்சியமளிப்பார். விசாரணை அந்தரங்கமாக நடைபெறும்.]

## ஆலயங்கள் அங்குமிங்கும் கட்டுவதற்குத் தடை

### கலாச்சார மந்திரியின் புதிய மசோதா

கொழும்பு, வெள்ளி

வழிபாட்டிடங்களை முன் யோசனையின்றி அங்குமிங்குமாகக் கட்டுவதைத் தடை செய்யும் மசோதா ஒன்றைக் கைத்தொழில், உள்நாட்டுக் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா இன்று பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்.

இம்மசோதா பற்றி விளக்கி மந்திரி கூறியதாவது:-

முன் யோசனையின்றி மத வழிபாட்டிடங்களைக் கட்டுவதால் சமூகத்தில் சமய சச்சரவுகள் வளர ஏதுவாகிறது.

கலாசாரப் பகுதியின் அனுமதியில்லாமல் பொது இடங்களில் விக்கிரகங்களை வைத்து ஆராதனை செய்வதையும் மேற்படிமசோதா தடைசெய்யும். பொதுநலன்கருதி மத வழிபாட்டிடங்களை அகற்றும்போது அதற்கான கஷ்ட ஈட்டை அரசாங்கம் வழங்கும்.

## சுபாஸின் அஸ்தி பாரதத்துக்கு வரும்

புதுடில்லி, நவ. 24

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் அஸ்தி ஜப்பானிலிருந்து பாரதத்துக்கு தகுந்த மரியாதையுடன் கொண்டுவரப்பட இருப்பதாக பாரதப் பிரதமர் திரு. நேரு தெரிவித்துள்ளார்.

## அணு ஆயுத தடை ஐ. நா. வில் இன்று விவாதம்

நியூயார்க், நவ. 24

அணு ஆயுதங்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் உபயோகிக்கக் கூடாது என்னும் பிரேரணை மீதான விவாதம் இன்று ஐ நா. மகாசபையில் நடைபெறவிருக்கிறது.

இது சம்பந்தமாக கிழக்கு மேற்கு தரப்பினரிடையே கடும் வாக்குவாதம் நடைபெறலாமென நம்பப்படுகிறது.

## கார் இறக்குமதித் தடை தளர்த்தப்படும்?

### அரசாங்கம் பரிசீலனை

கொழும்பு, வெள்ளி

கார்களின் மொத்த இறக்குமதித் தடையை அகற்றி, வருடாந்த இறக்குமதியில் 5 சத விகிதத்தை அனுமதிப்பது பற்றி அரசாங்கம்ஆலோசித்து வருகிறது. கார் இறக்குமதியாளர்களுடன் இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரி, சமீபத்தில் நடத்திய ஒரு மகாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டது. சிறிய கார்களை இறக்குமதி செய்வதையே இறக்குமதியாளர்கள் விரும்புவதாய்த் தெரிகிறது.

## மண்வழ்ப் பராமரிப்புத் திட்டம்

சென்னை, நவ. 24

தமிழ் நாட்டில் மண்வழ பராமரிப்பு திட்டம் செயல் படுத்தப்பட இருக்கிறது.

இத் திட்டத்தில் பொதுமக்களுக்கு பரிசு வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

ரூ. 150, ரூ. 100, ரூ. 50 ஆகிய மூன்று பரிசுகளை இத் திட்டத்தின் பிரகாரம் பரிசு பெறுபவர்களுக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## தேகவியோகம்

### Dr. K. குமாரசுவாமி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த டாக்டர் கே. குமாரசுவாமி 18-ந் திகதி சிங்கப்பூரில் காலமானர். இவர் ஜோகூர் அரசாங்கத்தில் பதவி வகித்தவர். மகன் திரு. பஞ்சாட்சரம் அங்கு பாரிஸ்டராக இருக்கிறர். திருவாளர்கள் பொன்னம்பலம், விசுவலிங்கம், (சிங்கப்பூர்) கே. தியாகராசபிள்ளை (விக்டோரியாக்கல்லூரி சுளிபுரம்) இவரது சகோதரர்கள்: சகோதரி திருமதி வி. செல்லையா முன்னரே காலமாகிவிட்டார்.

---

## பதுளை சரஸ்வதி வித்தியாசாலை

### மகா வித்தியாலயமாக்க கோரிக்கை

பதுளை, வெள்ளி

பதுளையிலுள்ள சரஸ்வதி வித்தியாசாலையை ஒரு மகா வித்தியாலயமாக்கி அதன் மூலம் இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் மேற்படிப்புக்கும் வேண்டிய வசதியளிக்குமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று பதுளை சைவ பரிபாலன சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம் திரு. கே. எஸ். இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன:-

"கல்வி சம்பந்தமாக மாணவர்களை இலங்கையர், இலங்கையர் அல்லாதவர் எனப் பாகுபடுத்தும் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கை மனிதத் தன்மையற்றதும் சர்வதேயக் கொள்கைக்கு முரண்பாடானதுமென அதனை இச் சங்கம் பலமாகக் கண்டிக்கின்றது. இந்துக்களும், முஸ்லிம்களும் கலந்து படிக்கும் பல பாடசாலைகளை முஸ்லிம் பாடசாலையாக்குவதற்காக எடுத்துக்கொண்ட சூழ்ச்சியே இம் மனிதத் தன்மையற்ற கொள்கையாக உருவெடுத்திருக்கிறது. முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அரசாங்கம் செய்யும் விசேட சலுகைகளைச் சங்கம் வரவேற்கிறது. ஆனல் அச்சலுகைகளினல் மற்றச் சமூகத்தினர்—விசேடமாகத் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதைச் சங்கம் வன்மையாக எதிர்க்கிறது. இக்கொள்கை அடிப்படையில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளினல் தமிழ் மாணவர்கள் பெரும்பான்மையாகவுள்ள பல பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாகின்றன; அத்துடன் அத்தமிழ் மாணவர்கள்-பெரும்பாலும் இந்துக்கள் முஸ்லிம் சூழ்நிலையிற் கல்விகற்கவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டு வருகிறது. ஆகவே இக்கொள்கையை மாற்றும்படியும் இச் சங்கம் அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதுடன் இவ்வித வேண்டுகோளைச் செய்யும்படி இலங்கையிலுள்ள மற்றும் ஸ்தாபனங்களையும் கேட்டுக்கொள்கின்றது."

"இந்துப் பிள்ளைகளின் சமய போதனையில் வழமையிலும் கூடிய சிரத்தையெடுக்கும்படி பதுளைப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் இந்து ஆசிரியர்களையும் அதிபர்களையும் இச் சங்கம் வேண்டிக்கொள்வதுடன், கொழும்பு விவேகானந்த சபையாரினல் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் சைவ சமய பாடப்பரீட்சைக்கு மாணவரைத் தோற்றச் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளுகின்றது."

"பதுளையிலுள்ள சரஸ்வதி வித்தியாசாலையை ஒரு மகா வித்தியாசாலையாக்கி. அதன் மூலம் இப்பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் மேற்படிப்புக்கும் வேண்டிய வசதியளிக்குமாறு இச் சங்கம் கல்வி மந்திரியையும் கல்வியதிகாரிகளையும் வேண்டிக்கொள்கிறது."

---

# சிறைத்தண்டனைபெற்றவர்கள் வேலையிழக்காதிருக்கப் புதிய திட்டம்

கொழும்பு, வியாழன்

சிறைக் கைதிகள் தமது வேலைகளை இழக்காதிருப்பதற்கான திட்டமொன்றை கைத்தொழில் உள்நாட்டுக் காரியதரிசி திரு. ஷெல்டன் பெரேரா அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்குச் சிபார்சு செய்துள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ், சிறைக் குற்றவாளி ஒருவர் விடுதலை பெற்றதும், தாம் முன்னர் அமர்ந்திருந்த வேலையில் திரும்பவும் சென்று அமர்ந்து கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு வருடத்துக்குட்பட்ட காலப்பகுதியில் சிறைத்தண்டனை அனுபவித்து வருபவர்களுக்கே இவ்விதி அமையும்.

---

## மாகோ உப்பு அதிக கசப்பு

மாகோ, வியாழன்

மாகோவில் விலையாகும் கறி உப்பு அதிகம் கசப்புத் தன்மையுடையதாகவிருக்கிறது. மாகோவிலுள்ள கிராமமொன்றில் அன்னதானத்தின்போது சமைக்கப்பட்டிருந்த கறிகள் அவ்வளவும் இந்த உப்புச் சேர்க்கப்பட்டதால் அதிக கசப்பாக இருந்தன. இதன் காரணமாக அவ்வளவு உணவும் வீணயிற்று.

சமையலுக்கு நல்ல உப்பு இல்லாமல் வீட்டுப் பெண்கள் பெரிதும் கஷ்டப்படுகிறர்கள். மாகோவில் விலையாகும் உப்பு அதிகம் கசப்புடையதாகவிருக்கிறது.

---

## 'மார்க்ஸிசம்'பற்றி] பல்கலைக் கழகத்தில் கருத்தரங்கம்

பேராதனை. வியாழன்

"கம்யூனிஸ்ட் நாடுகள் கடந்த பல ஆண்டுகளாகப் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைந்துள்ளன. எனினும் இந் நாடுகள் தமது இயற்கைச் சுபாவங்களில் எதுவித மாற்றமும் அடைந்தில."

இவ்வாறு பேராதனைப் பல்கலைக் கழகக் கிறிஸ்தவ மாணவர்களின் மதகுரு வணக்கத்துக்குரிய லக்ஷ்மன் விக்கிரமசிங்கா பல்கலைக் கழக மாணவ சோஷலிஸ சங்கம் 'மார்க்ஸிஸம்' பற்றி நடத்திய விவாத மேடையொன்றில் பங்குபற்றிப் பேசுகையில் கூறினர்.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி திரு. என். சண்முகநாதன், பல்கலைக் கழகத் தத்துவத்துறை விரிவுரையாளர் திரு. கே. என். ஜயத்திலகா' திரு. பிலிப் ஈஸ்ட்மன் ஆகியோரும் விவாத மேடையில் பங்கு பற்றினர்.

"ரஷ்யாவிலும் பார்க்க அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளே யுத்தம் பற்றி அதிகம் பேசுகின்றன" எனத் திரு. சண்முகநாதன் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த இருபது வருடங்களாக கடவுள் நம்பிக்கையின்றி நான் வாழ்ந்திருக்கிறேன். ஆனல் கோவிலுக்குச் செல்லும் எந்த மனிதனிலும் பார்க்க என்னை மதவிரோதி என்று சொல்ல முடியாது.

திரு. ஜயதிலகா பேசுகையில் கூறியதாவது:-

உண்மை எப்பொழுதுமே உண்மையாகத்தான் இருக்கும். எனது வசதிகளுக்காக உண்மையை மறைக்க நான் விரும்பவில்லை. ஜனநாயக சோஷலிஸத்தை எதுவித போராட்டமுமின்றி நிறுவலாம். அப்படி நிறுவியிருந்தால் சோஷலிஸ நாடுகள். பலவற்றின் ஊழல்களைத் தடுத்திருக்கலாம்."

திரு. ஈஸ்ட்மன் பேசுகையில் 'மார்க்ஸிஸம்' பற்றிய விவாத மேடைகளை இலங்கையில் நடத்தக் கூடியதாக இருப்பது போல எல்லா நாடுகளிலுமே நடத்தக் கூடிய சூழ்நிலை இருப்பதைத் தாம் விரும்புவதாகக் கூறினர்.

---

## யாழ்ப்பாணம் உறுதுணையாளர் சங்கம்

### 120 வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் உறுதுணையாளர் சங்கம் தமது 120 ஆண்டு விழாவை முன்னிட்டு பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது:-

'வறியார்க் கொன் றீவதே ஈகை' என்பதோடு இச் சங்கத்தின் சேவை நின்றுவிடவில்லை. இன்றைய யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையை முதன் முதலாக ஆரம்பித்து, 57 வருடகாலமாகத் தொண்டாற்றி சுமார் 14 ஏக்கர் நிலத்துடன் சேர்ந்த இந்த வைத்தியசாலையை, 1907-ஆம் ஆண்டு அரசினரிடம் ஒப்படைத்தது.

வறியார்க்குப் பண உதவி தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தது. இந்த மாதாந்த பொதுசன உதவிப்பணம் கொடுக்கும் பொறுப்பின் பெரும் பகுதியை அரசினர் சமூகசேவா இலாகா ஏற்றுக்கொண்ட போதும், இவர்களின் பார்வைக்கு மறைவான நூற்றுக்கணக்கான ஏழைகள் இன்றும் உதவிபெருது தவிக்கின்றனர். பாடசாலை செல்லும் ஏழைக் குழந்தைகள் தமது பாடப்புத்தகங்கள் பெற்றுக் கொள்வதற்கும் இச் சங்கத்தின் பண உதவியை நாடுகின்றனர். இந் நிலையில் சாதி மத பேதமற்ற முறையில் தகுந்த சேவை புரியும் தாபனம் இதைவிட வேறென்று இல்லையெனலாம்.

இச் சங்கத்தின் சேவைகள் யாழ்ப்பாண நகரசபை எல்லைகளோடு நில்லாது யாழ்ப்பாண மாவட்டப் பகுதி முழுவதிலுமுள்ள ஏழை மக்களுக்கு இயன்ற சேவைகள் செய்துவருகின்றது.

120-ஆம் ஆண்டு விழாக் கொண்டாட்ட ஞாபகார்த்தமாக, 1200 ஆயுள் அங்கத்தவரையும், 120 சாதாரண அங்கத்தவரையும் சேர்ப்பதென்று முடிவு செய்துள்ளது.

---

## ஆதரவற்ற சடலங்களுக்கு அரசாங்க ஆதரவு

கொழும்பு, வெள்ளி

ஆதரிப்பார் யாருமின்றி அந்தரித்து மரணமாகுபவர்களின் சடலங்களை அடக்கம் செய்விப்பதில் அரசாங்க அதிபர்கள் அதிகமான பணத்தைச் செலவிடுவதற்கு உள்நாட்டு அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது. திக்கற்றவர்களின் பிணங்கள் எதுவித மரியாதைகளும் செய்யப்படாது அடக்கஞ் செய்யப்பட்டு வருகின்றன, இப்பிணங்களின் அடக்கத்துக்கான செலவுகளுக்கென உள்நாட்டமைச்சு பணம் ஒதுக்கிவைத்துள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள பணம் கீழ்வரும் அம்சங்களுக்கு செலவிடப்படவேண்டும் என அரசாங்க அதிபர்களுக்கு உள்நாட்டமைச்சு அறிவித்துள்ளது.

பகல் காலத்தில் ஒரு பாதுகாவலரும் இராக்காலத்தில் இரண்டு பாதுகாவலர்களும் வசதிக்கேற்ப ஒழுங்கு செய்யப்படவேண்டும். பிணக்கிடங்கு தோண்டுதற்கு பிரேதத்தை எடுத்துச் சென்று அடக்கஞ்செய்வதற்கும் 4 தொழிலாளர்கள் ஒழுங்கு செய்யப்படவேண்டும். இரவில் பெட்ரோல் விளக்கு வசதி செய்ய வேண்டும். பிரேத விசாரணைக்குத் தற்காலிக கொட்டில் ஒன்று அமைப்பதற்குச் பணச் செலவு வழங்கவேண்டும். பிரேதம மூடுவதற்கு சீலை, பிரேதப் பெட்டி, பிரேதம் எடுத்துச் செல்லும் வண்டி ஆகியவற்றுக்குப் பணம் செலவிட வேணடும்.

---

## பருத்தித்துறையில் கடல் கொந்தளிப்பு

பருத்தித்துறை, புதன்

இப்பகுதியில் கடல் கொந்தளிப்பும் காற்றும் அதிகரித்திருப்பதனல் .கடற்தொழில் முற்ருக ஸதம்பித்துள்ளது. பருத்தித்துறை சந்தைக்கு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து மீன்கள் கொண்டுவரப்படுகின்றன. இடையிடையே நிலைமை சீரடைந்தாலும் முற்ருக நிலைமை மாற்றம் அடைய சுமார் 3 மாதமாவதாகும் என கூறப்படுகிறது.

---

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் நாகேஸ்வரராவ் நடித்த எங்கள் செல்வி

•

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன் நடித்த மணளனேமங்கையின்பாக்கியம்

•

சாவகச்சேரி தேவேந்திரா ஜெமினி கணேசன் நடித்த களத்தூர் கண்ணமமா

---


வலிகாமம் வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தெல்லிப்பளை.

தேவை:

லொறிச் சாரதியும், கிளீனரும்,

பத்து வருட அனுபவமுள்ள ஒரு லொறிச்சாரதி தேவை. பின் வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 7-12-61 முன் சமாசக் காரியதரிசிக்கு மனுச்செய்க.

வயது: 30—40. தராதரம்: தமிழில் ஏழாம் தர்ம் சித்தியடைந்திருக்க வேண்டும். பிணை: ரூபாய் 500/-.

சம்பளம் தரம்: II $\frac{90/- — 120/-}{10 \times 3/-}$ தரம் I $\frac{120/- — 160/-}{8 \times 5/-}$

வாழ்க்கைப்படி தொழில் கட்டுப்பாட்டுக் கந்தோர் விதித்த வீதப்படி கொடுபடும்.

கிளீனர்

அனுபவமுள்ள லொறிக் கிளீனர் தேவை.

வயது: 25 — 40. தராதரம்: தமிழில் ஏழாம்தரம் சித்தியடைந்திருக்க வேண்டும். பிணை: ரூபாய் 300/-.

சம்பளம்:- தரம்: II $\frac{60/- — 80/-}{10 \times 2/-}$ தரம்: I $\frac{80/- — 100/-}{8 — 2/50}$

வாழ்க்கைப்படி தொழில் கட்டுப்பாட்டுக் கந்தோர் விதித்த வீதப்படி கொடுபடும்.

க. இராமச்சந்திரன்
காரியதரிசி.



குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)
31, செட்டியார் தெரு, கொழும்பு.

# ஓய்வுபெற்ற அரசாங்க டாக்டர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவர்

கொழும்பு, வியாழன்

60 வயதில் ஓய்வுபெற்ற அரசாங்க டாக்டர்கள் மீண்டும் வைத்திய சேவைக்கு அழைக்கப்படவிருக்கிறார்கள். டாக்டர்கள் பற்றாக்குறையை முன்னிட்டு இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருப்பதாய் சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா தெரிவித்தார். அவர்கள் 65 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருக்கவேண்டும் என்றும், ஆயினும் அவர்கள் நிரந்தரமாக சேவைக் கழைக்கப்படமாட்டார்கள் என்றும் மந்திரி கூறினர்.

## அமெரிக்காவிலிருந்து ரயில் வண்டிகள்

கொழும்பு, வியாழன்

அமெரிக்காவிடமிருந்து டீசல் என்ஜின் இணைக்கப்பட ஐந்து ரயில்வண்டிகளை இலங்கை அரசாங்கம் வாங்கவிருக்கிறது. அமெரிக்காவுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்டுள்ள கடன் உதவி உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ரயில் வண்டிகளை இலங்கை அமெரிக்காவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஐந்து ரயில் வண்டிகளும் ஜனவரியில் இங்கு அனுப்பிவைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாலைநேர வகுப்புகள் வரவேற்கத்தக்கதல்ல

மாத்தறை, வியாழன்

ஆசிரியர் ஒருவரின் சேவையை பொன், வெள்ளி ஆகியவற்றின் விலைகளைக்கொண்டும் மதிப்பிட முடியாது. ஆசிரியத் தொழில் தியாகம் நிறைந்த மகத்தான தொழிலாகும். கல்வியறிவும் மதிப்பும் உள்ளவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வருவார்கள். ஒரு சில கோடரிக் காம்புகளும் ஆசிரியர்களிடையே காணப்படுகிறார்கள் என்பதை நினைக்கும் போது மனவேதனை உண்டாகிறது."

இவ்வாறு கல்வி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்ன மாத்தறை யாட்டியனவில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டமொன்றுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினர். யட்டியன வித்தியாலய மாணவர்களின் கலை கைப்பணிப் பொருட்காட்சியொன்றைத் திறந்து வைத்த வைபவத்தையிட்டு, இப்பகிரங்கக் கூட்டம் கூடப்பட்டது. திரு. கருணரத்ன மேலும் கூறியதாவது:

"பாடங்களில் குறைவான பிள்ளைகள் சிலவற்றின் மீது வகுப்பு நேரங்களில் கவனம் செலுத்தாது சில ஆசிரியர்கள் மாலை நேர வகுப்புக்களை நடாத்தி வருவதாகத் தெரிய வந்துள்ளது. இம்முறை அத்தகைய ஆசிரியர்களுக்கு லாபமளிக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனல் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு முறையாகும்."

# 'இலங்கைக்கு இரண்டாவதுமொழி ஆங்கிலமே உகந்தது'

— ஆல்டுவெஸ் ஹக்ஸ்லி

கொழும்பு, வியாழன்

"ஆங்கிலத்தைவிட வேறெந்த மொழியும் இலங்கை மாணவனுக்கு ஏற்ற இரண்டாவது மொழியாகாது. இலங்கை மாணவன் சிங்களவனாக இருந்தாலும் தமிழனாக இருந்தாலும் அவனுக்கு ஏற்ற இரண்டாவது மொழி இலங்கையில் பலரால் பேசப்பட்டு வரும் ஆங்கில மொழியே".

இவ்வாறு இலங்கை வந்துள்ள திரு. ஆல்டுவஸ் ஹக்ஸ்லி, ரத்மலானை விமான நிலையத்தில் அவரைப் பேட்டி கண்ட பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

புகழ்வாய்ந்த எழுத்தாளரும், தத்துவ ஞானியும் சரித்திர நிபுணருமான திரு. அல்டஸ் ஹக்ஸி தமது பாரியாருடன் புதன்கிழமையன்று சென்னையிலிருந்து இங்கு வந்துள்ளார். திரு. ஹக்ஸி பத்திரிகை நிருபர்களுக்கு மேலும் கூறியுள்ளதாவது:-

"இலங்கையின் மொழிப் பிரச்சினை இந்திய மொழிப் பிரச்சினையை அதிகமாக ஒத்திருக்கிறது. ஒரு மொழி அரசாங்க மொழியாக்கப்பட்டால் அந்த மொழியில் அரசாங்க தஸ்தாவேஸுக்கள் அனைத்தும் அமைக்கப்படல் வேண்டும். அத்தோடு அவை மற்றைய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். ஒரு பிள்ளையின் இளம்பிராயத்திலேயே அவனது இரண்டாவது மொழியில் பாடங்களைப் போதிப்பது நல்லதாகும். அவ்வாறு செய்வதனல் அப்பிள்ளை இலகுவில் அந்த மொழியைப் பயின்றுவிட முடியும். ஒரு மொழியை உலக மொழி என்பதனல் அது பல மக்களால் பேசப்பட்டுவர வேண்டும். சரித்திரமும் இலக்கியமும் இல்லாத செயற்றை மொழியொன்றை உலகமொழியாக்குவது முடியாத காரியம். தாம் அடுத்தபடியாக வெளியிடும் புத்தகம், இலங்கைக்கும் சுமாத்திராவுக்குமிடையே அமைந்துள்ள ஒரு தீவு பற்றியே அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## நிருவாகத்தில் சங்க பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும்

கோட்டை, வியாழன்

கூட்டுறவு மொத்தவிற்பனைத் தாபனத்தின் பொருள்கள் கூ. மொ. வி. சங்கங்கள் அனைத்துக்குமிடையே பங்கிடப்படவேண்டும் எனவும் கூ. மொத்த விற்பனைத் தாபனத்தின் நிருவாகம் பங்காளிகளான சங்கங்கள் அனைத்தின் பிரதிநிதிகளையும் கொண்டுள்ளதாக இருக்கவேண்டும் எனவும் கொழும்பு, முதலாளியார் மாவட்டப் புல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் 17வது வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. எல். எம். விக்டர் டி சில்வா பேசுகையில் கூறியதாவது, கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் டைரக்டர்கள் குறிக்கப்பட்ட மந்திரியால் அவரது விருப்பத்துக்கே நியமிக்கப்படுகிறார்கள். ஆனல் கூ. மொ. வி. சட்டத்தின்படி டைரக்டர்களை கூட்டுறவுச் சங்கங்களே தெரிவுசெய்ய வேண்டும் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

# அலட்சிய மனப்பான்மையே இன்றைய நிலைக்குக்காரணம்

## நுவரேலியா கலாச்சார மகாநாட்டில் உடுப்பிட்டி எம். பி.

புசல்லாவ, வியாழன்

"மலைநாட்டு மக்களிடையே தொடர்புகொள்ளும் வாய்ப்புக் கிட்டியதற்காக பெருமகிழ்ச்சியடைகிறேன். 1647-ம் ஆண்டில் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டபோது அலட்சியமாயிருந்ததால் இன்றையநிலை யேற்பட்டுள்ளதென்பதை உணர்ந்து அலட்சியம் செய்த தமிழர்களுக்காக உங்களிடம் மன்னிப்புக்கோருகிறேன்.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக நுவரேலியா மாவட்டக் கழக கலாச்சார மகாநாட்டில் பேசும்போது கூறினர். திரு. எஸ். சி. இராமநாதன் தலைமையில் மகாநாடு நடைபெற்றது.

இம்மகாநாடு தீவொளி தியேட்டர் மைதானத்தில் நடைபெற்றது. திரு. எம். ஏ. செல்லமுத்து மகாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார்.

இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், பொதுச்செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் திரு. எம். ஏ. வேலழகன், குறட்செல்வன் குமாரசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள்.

### திராவிடர் நாகரிகம்

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்;-

திராவிட நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து வளர்ந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஜாவா, சுமத்ரா முதலிய இடங்களில்பெருமையுடன்போற்றி வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

திருக்குறளும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழர்களின் உயர்வையும், பெருமையையும், பண்பாட்டையும் எடுத்தியம்பும் நூல்களாக சிறந்து விளங்குகிறது.

பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலில் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் தமிழர்களின் நல்வாழ்வுக்குப் பல சிறந்த ஆலோசனைகளை விளக்கிச் சொன்னர். திரு. ஏ. இளஞ்செழியன் தமிழர்களின் ஒற்றுமையை வற்புறுத்திப் பேசினர். திரு. ஏ. இராசரத்தினம் நன்றிகூறினர்,

## சுப்பிரமணிய இல்லம் வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலை முத்துக்குமாரு இல்லத்திற்கும், சுப்பிரமணிய இல்லத்திற்குமிடையில் நடைபெற்ற வலைப் பந்தாட்டத்தில் சுப்பிரமணிய இல்லம் 12-4 கோல்களினல் வெற்றியீட்டியது.

செல்வி. இ. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

சின்னத்தம்பி இல்லத்தினரும் முத்துக்குமாரு இல்லத்தினரும் கலந்துகொண்ட மற்றேர் போட்டியில் சின்னத்தம்பி இல்லத்தினர் 8-7 கோல்களினல் வெற்றியீட்டினர்.

இப் போட்டிக்கு திருமதி ஆர். வயிரமுதது மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# மதுபோதையில் மோட்டார் ஓட்டிச்செல்லும் சாரதிகள்

## கடும் நடவடிக்கையெடுக்க சட்டம் மாற்றியமைக்கப்படும்

கொழும்பு, வியாழன்

மதுபானம் அருந்திப் போதையில் மோட்டார் வாகனங்களை ஓட்டிச்செல்வோர்கள் அதிக குற்றமடிப்பதற்கான முறையில் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை மாற்றியமைப்பதென கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா தீர்மானித்துள்ளார்.

மோட்டர் வாகனங்களைச் செலுத்துவதில் இரண்டாவது தடவையாகக் குற்றஞ் செய்பவர்கள்மீது அதிக பணஞ் செலுத்தும்படி குற்றமடிக்கப்படுவதோடு அவர்களது லைசென்சுகளையும் ரத்துச்செய்யப்படும்.

கள்ளத்தனமாக குடிவகை ஏற்றிச் செல்லும் மோட்டார் வாகனங்களைப் பறிமுதல்செய்யக்கூடிய முறையில் கலால் சட்டங்களும் மாற்றப்படவிருக்கின்றன.

## இவ்வருட முடிவுக்குள் பாடசாலைகளை ஒப்படைக்கவேண்டும்

### கல்வி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டிய பள்ளிக்கூடங்கள் அனைத்தும் இவ்வருடம் முடிவடைவதற்குமுன்னர் ஒப்படைக்கப்படவேண்டும் எனக் கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் அறிவித்துள்ளார்.

2,643 பள்ளிக்கூடங்களிலும் இதுவரை 174 வித்தியாதிபதியின்நிருவாகத்திலுள்ளபள்ளிக்கூடங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# நாட்டில் பரவும் சைக்கிள் திருட்டு

## குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

யாழ்ப்பாணம், வியாழன்

மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த எஸ். தருமலிங்கம் என்பவருக்குச் சொந்தமான சைக்கிளை வாடைக்கு எடுத்து நம்பிக்கைமோசடிசெய்ததாக எச். சிறிசேன என்பவர்மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எம். வல்லிபுரத்தினல் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே டிசம்பர் 5-ம் திகதிக்கு தீர்ப்புவழங்குவதை மாஜிஸ்ரேட் ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை கே. இராசரத்தினத்துக்குச் சொந்தமான சைக்குள் ஒன்றைத் திருடியதாக அரியாலையைச்சேர்ந்த எம். தவலிங்கத்தின்மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கோர்ட்டாருக்குப் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது:—

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்புள்ள பாபர் சலூனுக்கு முன்னல் சைக்கிள்விடப்பட்டிருந்ததாகவும். சொந்தக்காரர் ஆஸ்பத்திரிக்குச் சென்று திரிம்பியதும் சைக்கிள் திருடப்பட்டு இருந்ததாகவும் பொலிசார் தேடியபோது வயாவிளானிலுள்ள ஒருவரிடம் அது விலைக்குப் போயிருந்ததாகவும் பின்னர் அங்கிருந்து அதனைப் பொலிசார் எடுத்துவந்தனரெனவும் தெரிவிக்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதனல் டிசம்பர் 5-ம் திகதி தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

### சையிக்கிள் திருட்டு

நகரப்புறத்தில் கைக்கிள் திருட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் இப்பொழுது நகருக்கருகாமையிலுள்ள இடங்களிலுள்ள வீடுகளிலிருந்தும் சைக்கிள்களைத் திருடுவதில் ஈடுபட்டிருப்பதாகப் புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

பாஷையூரைச்சேர்ந்த அரோனி பிலிப் என்பவர் வீட்டிலும் அண்மையில் ஓர் சைக்கிள் திருட்டுநடைபெற்றுள்ளது

வீட்டில் வைத்துவிட்டு உள்ளே சென்று வருவதற்குள் சைக்கிள் மாயமாய் மறைந்துவிட்டதாம்.

தட்டாதெருவைச்சேர்ந்த நாகலிங்கம் என்பவர் படலைக் கண்டையில் சைக்கிளை நிற்பாட்டி வளவுக்குள் சென்று திரும்புவதற்கிடையில் சைக்கிள் திருடப்பட்டுவிட்டது.

நாயன்மார்காட்டைச் சேர்ந்த எஸ். யோகரத்தினம் என்ற மாணவரின் சைக்கிள் ஒன்றும் இவ்வாறேதிருடப்பட்டுள்ளன.

இவைகள் எல்லாம் திருடப்பட்டதாகப் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசாரும் புலன் விசாரணை நடத்திவருகின்றனராம்.

## புனித நிலமாக்க திட்டம் தயார்

கொழும்பு, வியாழன்

களனி ராஜ மகா விஹாரையைச் சுற்றியுள்ள நிலப் பகுதி வெகு விரைவில் புனித நிலமென ஒதுக்கப்படவிருக்கிறது. இதற்கான திட்டமொன்று நகர அமைப்புத் திட்ட இலாகாவினல் தயாரிக்கப்பட்டு தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குக் காத்திருப்பதாகத் தெரிகிறது. விஹாரையைச் சுற்றியுள்ள நிலப் பகுதி புனித நிலமாக்குவதற்கான சட்டத்தில் அந்நிலப் பகுதியின் பராமரிப்பு அபிவிருத்தி ஆகியவை பற்றிய நியதிகளும் அடங்கும்.

விஹாரை உற்சவ காலங்களில் சுற்றுப் புறங்களில் ஏற்படும் வாகன நெருக்கடிகளைக் குறைத்துக்கொள்ளுமுகமாகப் புதிய வீதியமைக்கும் திட்டமொன்றும் தயாராகியுள்ளது. இக்காலங்களில் அமைக்கப்பெறும் கடைகள் புனித நிலங்களுக்கு அப்பால் அமைப்பதற்கே அனுமதி வழங்கப்படும்.

---

பருத்தித்துறை, புதன்

புலோலி மேற்கு ஆழ்வான் செல்லன் என்பவா மீது சின்னன் கிட்டிணன் என்பவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டிப் பருத்திதுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் எதிரிக்கு ரூபா 100 அபராதம் விதித்தார்.

## மணி வாக்கு

'நாம் பிறரிடம் கண்டு பரிகாசம் செய்யும் குற்றங்கள் நமக்குள் நம்மையே பரிகாசம் செய்யும்.'

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ10 உ (25-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## "சங்கடப்படும் சுவர்க்கம்"

"சங்கடப்படும் சுவர்க்கம்" என்ற தலைப்புடனே இலங்கையைப் பற்றி "கார்டியன்" என்ற பொறுப்பு வாய்ந்த பிரிட்டிஷ் பத்திரிகையில் வெளியாகியுள்ள கட்டுரை, இங்கு அரசாங்கமுள்ளிட்டு பல அரசியல் தலைவர்களையும் சிந்திக்கவும், தங்கள் குறைகளை உணர்ந்து திருந்திக் கொள்ளவும் தூண்டுதலாக இருக்க வேண்டும்.

"கிராமப் புறங்களிலும் நகரங்களிலும் வேலையில்லாக் கஷ்டம் வேகமாக அதிகரித்து வருகிறது. இந்தியாவைவிட ஜனத்தொகையும் பெருகிவருகிறது. என்றாலும் பொருளாதார அபிவிருத்திக்கான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய முயற்சிகள் நத்தை வேகத்தில் நடக்கின்றன" என்று சரியாகச் சுட்டிக் காட்டுகின்றது. நாட்டில் அரசியல் அமைதி இல்லாமல், அவசர நெருக்கடி பிரகடனம் செய்ய நேரிட்டுள்ளது. பல கட்சி அரசியல் தலைவர்களுக்குள்ளாக நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இல்லை. இதனால் இயற்கைச் செல்வங்களைப் பயன்படுத்தவும், பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்களை அமைத்து அமுல் செய்யவும் முடியாமலுள்ளது. நாட்டிலே கலகங்கள் இல்லாமல், அன்றாட நிர்வாகத்தை நடத்திச் சென்றால் அதுவே பெரிய காரியமாகவுள்ளது.

கைக்குக் கிடைக்கும் எந்தச் சிறுபான்மையினரையும் கசக்கிப் பிழியக் கூடிய கோணல் மனப்பான்மையையும் வளர்த்துள்ளதாகக் கூறுகிறது 'கார்டியன்'. இலங்கை, அரசியல் சுதந்திரம் பெற்ற சென்ற13வருட காலத்தில்சிறுபான்மை சமூகத்தினர்கள்நிலைமை எப்படி மாறியிருக்கிறது என்பதையும் அவர்களது மனப்பான்மை இன்று எவ்விதமுள்ளதென்பதையும் நிதானமாக ஆராய்பவர்கள் மேற் குறித்த முடிவுக்கு வருவதில் வியப்பில்லை. இலங்கையிலே சமூக நல்லுறவும் ஒத்துழைப்பும், இல்லாததால்தான், நாட்டில் சமாதானமில்லாமல் அவசர நெருக்கடியை எட்டுமாதகாலமாகப் பிரகடனம் செய்து ஆட்சி நடத்த வேண்டிய கண்றாவியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மொழியுள்ளிட்டு சிறுபான்மை சமூகங்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்து, அவர்களது நம்பிக்கையைப் பெறுவதே, நாட்டில் சமாதானம் நிலவவும், அபிவிருத்தித் திட்டங்களை அமைத்து நாடு பொருளாதாரத் துறையில் முன்னேறவும் வழி செய்வதற்கு முதற்படியாகும்.

ஒரு தேசிய சமுதாயமாக, ஜனநாயக முறையில் உருவாக வேண்டிய இலங்கைக்கு, பலபல திகைப்புகள் ஏற்பட்டு வருவதாயும், சில சமயம் நிலைமை பெரிய கண்றாவியாகி, பெரும் நாசத்தில் முடியக் கூடியதாகவுமிருக்கிறதென்று 'கார்டியன்' கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது. நட்பு முறையில் கூறப்பட்டுள்ள இக் கருத்துக்களை ஓர் எச்சரிக்கையாகக்கொண்டு, பல கட்சித் தலைவர்களும் சிறப்பாக அரசாங்கமும், நாட்டின் மேலான நன்மையைக் கருதி, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒத்துழைத்தாலே இந்த "சுவர்க்கம்" பல சங்கடங்களையும் தவிர்த்து அமைதியாகவும், உலகத்தின் நன்மதிப்பைப் பெறும் முறையிலும் முன்னேறமுடியும்.

# நீண்டகாலம் வாழ வழி
## நிபுணர்களின் சிபார்சு

சத்துள்ள உணவுப்பொருளை உட்கொண்டால் அதுவேநீண்ட காலம் வாழ்வதற்கான வழியை வகுக்கும். இதற்காக சிபார்சுகளை சர்வதேச சத்துள்ள உணவு மகாநாட்டில் கலந்து கொண்ட நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர். இந்த சிபார்சுகள் 17 மொழிகளில் வெளியிடப்பட்டு உலகின் எல்லாப் பகுதியிலுமுள்ளவர்களின் நலனுக்காக விநியோகிக்கப்படும்.

மேற்கு ஜெர்மனி நகரான ஆக்கெனில்சர்வதேச சத்துள்ள உணவு விஞ்ஞானக் கவுன்ஸில் 7-வது மகாநாடு சமீபத்தில் நடைபெற்றது. 36 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1000 விஞ்ஞானிகள் இதில் கலந்துகொண்டனர். நாகரிகம், வியாதிகள் மற்றும் இதரக் காரணங்களினால் உயிருக்கு ஏற்படும் ஆபத்துகளைத் தடுப்பது எப்படி என்பது குறித்து இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

போதிய சத்து இல்லாத உணவு, அதிகமான வேலை, தேகப்பயிற்சி இல்லாமை, காற்றில் கலந்துள்ள விஷம், ஓசைகளால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி, நல்ல காற்று இல்லமை, அதிகப்படியான செயற்கை வெளிச்சம் இவைகளால் தேகாரோக்கியம் பாதிக்கப்படுகிறது. மக்களில் 95 சதவிகிதம் பேர் பல் வலியால் அவதியுறுகின்றனர். வயிற்றுவலி, குடல் உபத்திரவம், இருதயநோய் இவை காரணமாக அதிக வயதாவதற்கு முன்னமேயே மரணம் ஏற்படுகிறது. புற்று நோய் வியாதிகள் நரம்பு தளர்ச்சி நோய்கள் நாகரிக வாழ்வின் விளைவாகவே ஏற்படுகின்றன.

இதைப் பற்றி எல்லாம் இம்மகாநாட்டில் நன்கு பரிசீலனை செய்யப்பட்டதுடன் தக்க உணவு எது என்பது குறித்தும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இயற்கை தானியங்கள், பால், வெண்ணை, காய்கறிகள், உருளைக்கிழங்கு, பழங்கள் இவைகள் நல்ல சத்துள்ள உணவுகள் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ள. மீன்கள், முட்டைகள் இவைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் இவை தினமும் உட்கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. கொழுப்பு, சர்க்கரை இவைகளை ஓரளவுக்குகுறைக்க வேண்டும். தேன், பழரசங்கள், திராக்ஷை, எலுமிச்சம் பழங்கள் இவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். காப்பி, தேயிலை பானம் ஆகியவற்றை நிதானமாக உட்கொள்வதால் ஆபத்து எதுவுமில்லை. ஆனால் சிகரெட் பிடிப்பதால் தேகாரோக்கியத்திற்கு கெடுதல் ஏற்படுகிறது என்பது நிச்சயம்.

நீண்ட காலம் வாழ வழி செய்யும் இந்த சிபார்சுகள் 17 மொழிகளில் தயாரிக்கப்பட்டு உலகின் பல பாகங்களிலும் விநியோகிக்கப்படும். இம்மகாநாட்டின் தலைவர் டாக்டர் ஷ்விட்கார்ட் இதைப் பற்றி கூறுகையில் ஏழு வருஷ ஆராய்ச்சியின் விளைவாக இந்த சிபார்சுகள் உருவாகியதென்றும் உலக மக்களின் நீண்ட காலம் தேக சுகத்துடன் வாழ வழி செய்வதே இதன் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

# யோகி சுத்தானந்த பாரதியார் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள்

கொழும்பு, வெள்ளி

கவியோகி சுத்தானந்த பாரதியார் வியாழக்கிழமை விமானமார்க்கமாக இங்கு வந்து சேர்ந்தார். கட்டுநாயக்கா விமானநிலையத்தில் யோகிராஜ் சச்சிதானந்தா, திரு. க. இராமச்சந்திரன், திரு. நா. முத்தையா உட்பட அன்பர்கள் பலர் அவரை வரவேற்று மாலைகள் சூட்டினர்.

யோகி சுத்தானந்த பாரதியார் இருவாரங்கள் இலங்கையில் தங்கிப் பலஇடங்களுக்கும் விஜயம் செய்வார். நிகழ்ச்சிநிரல் பின்வருமாறு:

25-11-61 மாலை 3-30க்கு மாத்தளை சைவமகாசபை ஆதரவில் முத்துமாரியம்பாள் கோவிலில் வரவேற்பு.

25-11-61 மாலை 7 மணிக்கு கண்டி சைவமகாசபை மண்டபத்தில் பொதுக்கூட்டம்.

26-11-61 காலை 6-30க்கு உணுகலோயாத் தோட்டத்தில் முத்துமாரியம்மன் கோவிலுக்கு அத்திவாரக்கல் நாட்டு வைபவம்.

26-11-61 காலை 9-30 மணிக்கு சங்ஹேல் தோட்டத்தில் வரவேற்பு.

26-11-61 பி. ப. 3-30 மணிக்கு தாமரவல்லித் தோட்டத்தில் வரவேற்பு.

26-11-61 மாலை 7 மணிக்கு நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க ஆதரவில் கதிரேசன் கல்லூரியில் பொதுக்கூட்டம்.

27-11-61 மாலை 5 மணிக்கு ஹட்டன் சைவமகாசபை ஆதரவில் சைவமகாசபை மண்டபத்தில் கூட்டம்.

27-11-61 மாலை 7 மணிக்கு டிக்கோயா தரவிளைத் தோட்டத்தில் வரவேற்பு.

28-11-61 மாலை 4 மணிக்கு கொட்டகலை பெரிய மண்வெட்டித் தோட்டத்தில் வரவேற்பு.

28-11-61 மாலை 7 மணிக்கு பூண்டுலோயா சீனித் தோட்டத்தில் வரவேற்ப.

29-11-61 கண்டி சச்சிதானந்த தபோவனத்தில் வரவேற்பு.

30-11-61 வவனியா சுத்தானந்த சமாசத்தில் வரவேற்பு.

1-12-61 உருத்திரகரத்தில் கூட்டம்.

2-12-61 யாழ்ப்பாணம் தெய்வநெறிக் கழகத்தில் வரவேற்பு.

---

இரத்தினக் கம்பளம்

# மனிதனும் மிருகமும்

பதுமன்

படம் பிடித்துக் கொள்வதற்கு யாருக்குத்தான் ஆசையில்லை. அதுவும் தங்கள்படம் பத்திரிகைகளில் வெளிவருவதைப் பார்க்கும்போது எவ்வளவு பெருமை, குதூகலம்.

மானிடப் பிறவியெடுத்தவர்களுக்குத்தான் இந்த ஆசை என்றால் ஐந்தறிவு படைத்த மிருகங்களுமா இப்படி ஆசைப் பட்டுக் கொண்டு ஒற்றைக் காலில் நிற்க வேண்டும்.

வனவிலங்குகள் பாதுகாப்புப்பகுதி அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையை ஒருகணம் தட்டிப் பார்த்தபொழுது மிருகங்களுக்கும் படம்பிடிக்கும் ஆசை இப்போதெல்லாம் ஏற்பட்டுவருகின்றதென்பதை உணர முடிந்தது.

வில்பத்து போன்ற தேசிய பூங்காக்களில் பாதுகாக்கப் பட்டுவரும் மிருகங்களுக்கு அங்கு செல்லும் மக்களின் நடமாட்டம் பழக்கமாகிவிட்டதெனவும் அங்கு போவோர் வருவோரைக் கூடப் பொருட்படுத்தாது உணவு தேடும் முயற்சியில் அவைகவனத்தைச் செலுத்துகின்றன வென்றும் வனவிலங்குகள் பாதுகாப்புப் பகுதி அதிபரின் அறிக்கையில் கண்டிருக்கின்றது.

மனிதரைக் கண்டதும் அந்த மிருகங்கள் முன்னரைப்போல ஓட்டம் பிடிப்பதில்லையாம். படம் பிடித்துக் கொள்வதற்கு வசதியாக இவை 'போஸ்' கொடுக்கும் அழகை அறியும் போது 'பேஷ்'! என்று சொல்லாமல் வேறு என்னதான் சொல்ல முடியும்!

### மான் கூட்டம்

வில்பத்து பூங்காவில் புள்ளி மான் கூட்டம் உல்லாசமாகப் புல் மேய்ந்து திரியும் காட்சியை எண்ணும்போதே உள்ளம் துள்ளிக் குதிக்கின்றது. 4,500 மான்கள் இங்கு வேடர் பயமின்றி வாழ்ந்து வருகின்றனவாம். றுகுணு பூங்காவில் பட்சி சாலங்கங்கள் இனிய கீதம் பாடிப் பொழுதுபோக்குகின்றன. இவற்றை எல்லாம் எண்ணும்போது, 'காக்கை குருவி எங்கள் ஜாதி, உயர் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்ற பாரதியாரின் அடிகள்தாம் நினைவுக்கு வருகின்றன.

### மாப்பிள்ளைகள் தட்டுப்பாடு

ஜெர்மனியில் மாப்பிள்ளைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம். கிழக்கு ஜெர்மனியில் மணப்பருவம் அடைந்த பெண்களின் தொகைஆண்களிலும்பார்க்க56 சதவிகிதம்அதிகமாகியுள்ளதாம். மேற்கு ஜெர்மனியிலும் ஆண்களிலும் பார்க்கப் பெண்களின் தொகையே அதிகமெனக் கூறப்படுகிறது.

பிரான்ஸிலுள்ள பெண்களுக்கு இத்தகைய கஷ்டமில்லை. அமெரிக்காவில் ஆண்களிலும் பார்க்க 1,500,000 பெண்கள் அதிகமாகவுளர். இந்தியாவிலும் பர்மாவிலும் 'ஆண் சிங்கங்களே' அதிகமென அறிகின்றேன். எங்கள் இலங்கையிலும் மாப்பிள்ளைகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதாக அறிந்தேன். இது உத்தியோகபூர்வமான அறிக்கையல்ல. நேற்று முன் தினம் கலியாணத் தரகர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

### செனட்சபை அதிசயம்

இலங்கையில் அப்படிஎன்ன அதிசயமிருக்கப் போகிறதென கேட்கின்றீர்கள். அமெரிக்க செனட்சபையைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகின்றேன். அமெரிக்காவிலுள்ள இல்லினொயிஸில் செனட்சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கையிலேயே செனட்டர்கள் ஆகாரம் சாப்பிட்டுக் கொண்டும் பானம் அருந்திக் கொண்டும் புகைபிடித்துக் கொண்டுமிருப்பார்களாம். இத்தனைக்கும் அவர்கள் சபை அலுவல்களிலும் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதுதான் அதிசயம்.

## ஐயாறன் எழுதுவது

எதிர்பாராதவிதமாக திடீரென்று நண்பருடன் திரிகோணமலைக்குக்கிளம்பினேன். அங்கு கடலில் இரு சிவலிங்கங்கள் கிடைத்ததாகச் செய்தி வெளியானதும் அவற்றைச் சென்று பார்க்கவேண்டுமென்று அதிக ஆவலாக இருந்தது. வேண்டுவார் வேண்டுவதை ஈவான் என்று பெரியோர் கூறினரல்லவா?

காரில் சென்றோம். வவுனியாவுக்கும் அனுராதபுரத்துக்குமிடையே மழை சக்கை போடு போட்டது. காலையில் கன்னியா வெந்நீர் ஊற்றுக்குச் சென்றோம். சில வருடங்களுக்கு முன் பார்த்தது. இப்போது அப்பகுதியில் புதிதாக சில அபிவிருத்திகளை அங்கு கண்டேன்.

நீதிமன்றத்தில் பலகாலம் வழக்கு நடந்து இப்போது அந்த வெந்நீர் ஊற்று, கிராம சபையின் நிர்வாகத்தில்விடப் பெற்றுள்ளதாம்.

கிராம சபையினர் பொது மக்களுக்குச் சில நல்ல வசதிகளைச் செய்திருக்கிறார்கள். பொதுசன நிலையம், ஆண்-பெண்களுக்குத் தனித்தனியே குளிக்கும் இடம், இவை நல்ல ஏற்பாடுகள். வாசகசாலையும் அங்கு இருக்கின்றது. ஆனால் இன்னும் செய்யவேண்டிய அபிவிருத்திகள் அதிகமுண்டு.

இவ்வித வெந்நீர் ஊற்று பிரிட்டனில் இருந்தால், அடே அப்பா, அதை எவ்வளவு அபிவிருத்திசெய்திருப்பர்! உலக யாத்திரை ஸ்தலமாக ஆகியிருக்கும்!

* * *

வெந்நீர் கிணறுகளுள்ள இடம் முன்போல் அப்படியேதான் உள்ளது. அங்கு சென்ற சமயம் ஓர் அன்பர், பல்தேய்த்துக்கொண்டு, முன்படிகளிலேயே துப்பினர். பின்பு வாளியில் தண்ணீர் எடுத்து வாயைக் கொப்பளித்து உமிழ்ந்தார். இதைக்கண்டதும் குளிக்காமலே திரும்பிவிடலாம் போலிருந்தது!

எதிரிலே 'சுவரில் சவர்க்காரம் உபயோகிக்காதீர்' என்று எழுதியுள்ளனர். 'பல்தேய்த்து, கொப்பளித்து, இடத்தை அசுத்தப்படுத்தாதீர்' என்றும் உத்தரவிட்டால்நல்லதல்லவா? என்று பல்தேய்த்த அன்பரையே கேட்டேன். 'ஆமாம், ஆமாம், என்றார்.

முடிவில் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, குளித்தேன். பிரயாண அசதியெல்லாம் இரண்டொரு நிமிடத்தில் மாறிவிட்டது. அந்த இயற்கை வெந்நீருக்குத்தான் எவ்வளவு சக்தி! அங்கிருந்து வரவே மனமில்லை. ஆனால் கூட்டம் திமுதிமு என்று வந்து பல்தேய்க்க ஆரம்பித்துவிட்டதால் திரும்பிவிட்டோம்.

புனித கிணறுகள் உள்ள இந்த இடத்தை மக்கள் அசுத்தப்படுத்தாமல் சுத்தமாகவைத்திருக்க கிராமசபை தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னும் சில வருடங்களில் இந்த இடம் மிக மிக முன்னேற இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

* * *

பின்பு கோட்டைக்குப்போய் சுவாமி மலை சென்றோம். மான்கள் பயமின்றி முன்போலவே கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன. அழகான காட்சி. கடலில் கண்டெடுத்த சிவலிங்கம் எங்கே என்று ஆவலுடன் பூசாரி ஒருவரைக் கேட்டேன். அதோ, அங்கே! என்று எதிரிலுள்ள ஒரு மரத்தடியைக்காட்டினார்.

முதலில் கிடைத்த நீண்ட 'லிங்கத்தில்' 5 துளைகள் இருந்தன. ஆவுடையாரைப் பொருத்தி வைக்கவே அந்தத் துளைகள் இருந்திருக்கவேண்டுமென்கிறார் ஓர் அன்பர். இதைப்

(5-ம் பக்கம் பார்க்க)

# “மேனனின் கூற்று வியப்பானது”

## அசோக் மேத்தா கண்டனம்

புதுடில்லி, நவ. 24

இந்தியாவில் மேலும் சீன ஊடுருவல்கள் ஏற்பட்டது குறித்து லோகசபையில் விவாதிக்க சபாநாயகர் அனுமதித்ததுபற்றி நன்றி செலுத்துவதாக பிரஜா சோஷலிஸ்ட் கட்சித்தலைவர் ஸ்ரீ அசோக் மேத்தா ஒரு அறிக்கையில் கூறினார்.

இந்த அவசர விஷயம் குறித்து ஒவ்வொரு இந்தியரும் கவலையடைந்திருக்கிறார். மேற்கொண்டு தகவல்களுக்காக விவாதம் வரை காத்திருக்க வேண்டும் என்றார்.

(இந்தியா, சீனா இடையே) தீவிரமானவிரோதநடவடிக்கை இல்லை என்று வாஷிங்டனில் பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனன் கூறியது வியப்பாகி இருக்கிறது. பத்திரிகைகளில் வெளியானதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது என்று புதிய சீன ஊடுருவல்கள் பற்றி அவர் கூறியிருக்கிறார். காலநிலை காரணமாக எல்லைப் பகுதிகளில் புதிய நடமாட்டங்கள் சாத்தியமில்லை என்று அவர் கூறியிருக்கிறார். அங்கு ராணுவம் தேவையில்லை என்று அவர் கூறியது பிமாதமான பேச்சாகும்.

இந்தியப் பாதுகாப்பு இலாகாவிலும் ஒருக்கால் சர்க்கார் முழுவதிலும் இத்தகைய போக்கு இருப்பதால் புதிய ஊடுருவல்களை எவ்வாறு நிறுத்துவது, சீனர்களை விரட்டுவது என்பதுபற்றி மக்களே முடிவு செய்ய வேண்டும்.

நமது ஒருமைப்பாடு சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொரு தேசபக்தனுக்கும்ஆக்கிரமிப்பாளன்மீது பலத்த விரோதம் உண்டு.

ராணுவம் தேவையில்லை என்று பாதுகாப்பு மந்திரி கருதினால் வேறு வகையில் இந்த ஊடுருவல்கள் தடுக்கப்படாதது ஏன்? ராணுவம் தேவைப்பட்டால் ஆக்கிரமிப்பு ஸ்தலத்துக்கு 10,000 மைல் தூரத்தில் அவர் அதிசிரத்தையாக இருப்பது ஏன்?

காலநிலையை அவர் நம்பியிருக்க விரும்புகிறாரா? இந்தியா அவ்வாறு இருக்காது என மேத்தா கூறினார்.

# கிராமப்புறங்களில் சென்று வைத்தியர் சேவை செய்யவேண்டும்

—திரு. நேரு


புதுடில்லி, நவ. 23

‘வைத்தியர்கள் கிராமப்புறங்களில் சென்று சேவை செய்ய வேண்டும். பாரதத்தில் சுகாதார நிலைமை உயர்ந்துள்ளது என்பது இங்குள்ள மக்களின் சராசரி வயது 47 ஆக உயர்ந்துள்ளதிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது’.

இவ்வாறு வைத்தியர்களின் மகாநாடு ஒன்றில் பேசுகையில் பாரதப் பிரதமர் திரு. நேரு குறிப்பிட்டார்.

‘சுதந்திரத்துக்கு முன்னர் பாரத மக்களின் சராசரி வயது 32 ஆக இருந்தது இப்பொழுது 47 ஆக உயர்ந்துள்ளது. சுதந்திரத்தின் பின்னர் நாம் சுகாதார நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பதற்கு இது நல்லதொரு அறிகுறி. சுதந்திர பாரதத்தின் மிகப் பெரிய சாதனை இது.

சகல மக்களுக்கும் இலவச சுகாதார வசதி கிடைக்கக் கூடிய வகைகள் இங்கு செய்யப்பட வேண்டும்’.



லண்டனிலுள்ள ஹாம்ப்ஸ்டட்டில் 1912-ம் ஆண்டு மகாகவி தாகூர் வசித்த இடத்தில் ஒரு ஞாபகார்த்த சின்னம், முன்பு இந்தியாவில் பிரதம நீதிபதியாய் இருந்த ஸ்பென்ஸ்பிரபுவினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. தாகூர் நூற்றாண்டு விழாவை ஒட்டி நடைபெற்ற இவ்வைபவத்தில் பங்குபற்றிக் கொண்டவர்கள், இடமிருந்து வலம்: லண்டன் மாநகர சபையின் முன்னாள் தலைவர் ஸ்ரீமதி நார்மன்பிரெண்ட்விச், இந்தியத் தற்காலிக ஹைகமிஷனர் திரு. டி. என். கால், ஸ்பென்ஸ் பிரபு, ஹாம்ப்ஸ்டட் மேயர் நதான்பிரபு.

# கற்சிலைமடு அரசினர் பாடசாலை

## குறைபாடுகள் பற்றி எம். பி. மகஜர்

முள்ளியவளை, வெள்ளி

“இங்குள்ள நிரந்தரமான கட்டடம், 36 மாணவருக்கே போதுமானது. ஆனால் இப்போது, 112 மாணவர் கல்வி கற்கிறார்கள். 1957-ம் ஆண்டிலிருந்து ஆங்கில ஆசிரியர் இல்லை. மலசலகூட வசதி இல்லாதது, மிகவும் பெரிய ஒரு குறையாகும்.”

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு விஜயம் செய்த வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் அங்குள்ள நிலைமையை நேரிற் பார்வையிட்டவுடன் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மாணவர் தண்ணீர் எடுக்கும் கிணறு இடிந்த நிலையில் பாழடைந்திருப்பதாகவும், வேலிகள் பழுதடைந்து பாடசாலைக்குள் மாடுகள் நுழைவதாகவும், இவற்றை உடனே கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், வவனியா எம். பி. வற்புறுத்தியுள்ளார்.

# பள்ளிக்கூடங்களில் சமய போதனை அவசியம்

கொழும்பு, வியாழன்

பள்ளிக்கூடங்களில் சமய பாடம் போதிப்பதற்கான பாடத் திட்டங்களையும் புத்தக விபரங்களையும் கல்வி இலாகா பல பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. ஆரம்ப பாடசாலை வகுப்புகள் தொடக்கம் 8-ம் பாரம் வரையிலுள்ள வகுப்புக்களுக்கு இச் சமய பாடத் திட்டங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நல்ல ஒழுக்கத்துக்கும், பழக்கவழக்கங்களுக்கும் சமய பாட போதனை அவசியம் என வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி. சில்வா வலியுறுத்தியுள்ளார்.

# திருக்கார்த்திகை விழா

[illegible] சுளிபுரம், வெள்ளி

தொல்புரம் கொட்டியான் வளவு ஆதி முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கார்த்திகை விழாவில் தொல்[illegible]ம் மத்திய சனசமூகநிலைய த்தினரும் பங்குபற்றிப் பணியாற்றினர்.

# ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி நிச்சயமாக எதுவும்கூற எனக்குத் தெரியவில்லை. மற்றொரு ‘லிங்கம்’ சிறிய வடிவில் இருக்கிறது. அதில் சந்தனம், குங்குமம் வைத்திருந்தனர். தமிழ்நாட்டிலிருந்து விஷயமறிந்த ஆகம வல்லுனர்களை வரவழைத்து அவர்களது கருத்தைக் கேட்க முயற்சி நடப்பதாகத் தெரிகிறது.

கயிலயங்கிரியையே அசைக்கக்கூடிய இராவணன் பூசித்த லிங்கம், இவ்வளவு சிறிதாக இருந்திருக்குமா? என்று என்னென்ன கேள்விகளெல்லாமோ என் மனதிலெழுந்தன. என்றாலும் எங்கும் நிறைந்ததாகக் கூறப்படும் கடவுள், தூணிலும் துரும்பிலுமுள்ள தெய்வம், நினைத்தவருக்கு நினைத்தபடி அருள்செய்வாரென்ற வாக்கை நினைத்துக்கொண்டே திரும்பினேன்.

அழகான கோவில் முக்கால் வாசி எழும்பிவிட்டது. சித்திரை மாதத்துக்குள் புதுக் கோயில் கும்பாபிஷேகம் ஆகலாமென்றும். தடைகள்பலவும் நீங்கிவிட்டதாகவுமறிந்தேன். புதுக்கோவில் எழும்பினால் திருகோணமலைக்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் மீண்டும் ஏற்படக்கூடும்;

# பொதுப் பிரச்சினைகளை பரஸ்பரம் புரிந்து கொள்ள உதவும்

## நேரு-கென்னடி பேச்சுபற்றி திரு. கல்பிரய்த்

புதுடில்லி, நவ. 24

நேரு - கென்னடி பேச்சு வார்த்தைகளின் விளைவாக தென்கிழக்கு ஆசியாவில் இரு நாடுகளுக்கும் பொதுவாக உள்ள சில பிரச்சினைகளை நன்கு புரிந்துகொள்ள வகை ஏற்படும் என்று அமெரிக்க ஸ்தானிகர் கல்பிரெய்த் நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரதம மந்திரி நேருவுக்கும், ஜனாதிபதி கென்னடிக்குமிடையே நடந்த சம்பாஷணைகள் அனைத்திலும் கலந்து கொண்டவர் என்ற ரீதியில் விவாதத்துக்கு வராத முக்கியமான சர்வதேசப் பிரச்னை எதுவுமேயில்லை என்று தம்மால் கூற முடியும் என்று அவர் குறிப்பிட்டார். அமெரிக்க செயலை உருவாக்கும் சக்திகளைப் பிரதம மந்திரி நன்கு புரிந்து கொண்டார் என்பதும், அதே மாதிரி இந்தியாவின் கவலைகளை கென்னடி நன்கு புரிந்து கொண்டிருப்பாரென்பதும், பிரதம மந்திரியின் விவேகத்தினாலும், அனுபவத்தினாலும் கென்னடிக்கு நல்ல பயன் கிடைத்தது என்பதும் நிச்சயம் என்றார். பிரதம மந்திரியின் திறமை, சலியாத முயற்சிகளின் விளைவாக இந்தியக் கொள்கையை அமெரிக்க மக்களும், அமெரிக்கப் பத்திரிகைகளும் நன்கு புரிந்து கொண்டிருக்கும் என்பது நிச்சயம் என கல்பிரெய்த் குறிப்பிட்டார்.

பொகாரோ உருக்கு ஆலைக்கும், கல்கத்தா துறைமுக அபிவிருத்திக்கும் உதவி குறித்து அமெரிக்காவில் தாம் விதாதித்ததாக கல்பிரெய்த் குறிப்பிட்டார். பொகாரோ குறித்து அடுத்த சிலவாரங்களில் தற்காலிகமாக அறிவிப்பு ஒன்று வெளியாகும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கல்கத்தா துறைமுக அபிவிருத்தித் திட்டம் சம்பந்தப்பட்டவரை, இன்னமும் திட்டம் தயாரிக்கப்படாததால் உடனடியாக உதவிசாத்தியக் கூறு இல்லையென்றும் அமெரிக்க சர்க்காரும், போர்டு ஸ்தாபனமும் இந்திய சர்க்காருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இரு தலைவர்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளைக் குறித்துக் கேட்டதற்கு, கல்பிரெய்த் பதிலளிக்கையில் அணுசோதனைப்பிரச்சினை சம்பந்தமாகவே கருத்து வேறுபாடு நிலவியதாகவும், தற்காலிக அணுசோதனைத்தடையை அமெரிக்க மக்கள் விரும்பவில்லையென்றும் கூறினார்.

காங்கோ சம்பந்தப்பட்டவரை கருத்து வேறுபாடு எதுவும் நிலவியதாகத் தாம் நினைக்கவில்லை என்றார். ஐக்கிய காங்கோவையே அமெரிக்கா விரும்புவதாகவும், அந்நியக் கூலிப் பட்டாளங்களை வெளியேற்றி கடாங்காவை பெடரல் அமைப்புக்குள் கொண்டு வரவேண்டும் என்ற கொள்கையை ஆதரிப்பதாகவும் அவர் சொன்னார். காங்கோவில் இந்தியத் துருப்புகளின் பணி கூட்டறிக்கையில் கென்னடி வேண்டுகோளின் பேரில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றார்.

கோவா, அங்கோலா சம்பந்தமாக அமெரிக்க கொள்கையில் மாறுதல் ஏதாவது எதிர்பார்க்கப் படுகிறதா என்று கேட்டதற்கு சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் தமது நாட்டு சர்க்காரின் கொள்கையை கல்பிரெய்த் ஊர்ஜிதம் செய்தார். எனினும் போர்ச்சுக்கல் சம்பந்தமாக நேட்டோ கொண்டிருக்கும் மனோபாவத்தில் இக் கொள்கையின் மூலம் ஏற்படும் விளைவை தம்மால் கூற முடியாது என்றார். அங்கோலாவில் பயன்படுத்துவதற்காக தாங்கள் யாருக்கும் ஆயுதங்களைத் தரவில்லை என்று குறிப்பிட்டார்.

கோவாவில் இந்தியா ராணுவ நடவடிக்கையை எடுக்கும் பட்சத்தில் அமெரிக்கா இந்தியாவை ஆதரிக்குமா என்ற கேள்விக்கு பதில் அளிக்க மறுத்துவிட்டார்.

### ஸ்ரீ மேனனைப்பற்றிய தப்பபிப்பிராயம்

பிரதம மந்திரியின் அமெரிக்க விஜயத்திலும் ஸ்ரீ கிருஷ்ணமேனன் ஜனாதிபதி கென்னடியைச் சந்தித்ததிலும், அமெரிக்காவில் ஸ்ரீ மேனனைக் குறித்து நிலவிய சில தப்பபிப்பிராயங்கள் நீக்கப்பட்டு விட்டனவா என்று ஒரு நிருபர் கேட்டார்.

இதைப் பற்றிய சர்ச்சையில் இறங்க கல்பிரெய்த் மறுத்துவிட்டார் நல்லெண்ணத்தை அபிவிருத்தி செய்து கொள்ள எப்போதும் வாய்ப்பு இருக்கிறது என்று சிரிப்புக்கிடையே சொன்னார்.

# தாயகம் வரண்ட பிரதேசம் என்பது தவறான கருத்து

## யாழ்ப்பாணக் கல்லூரியில் உடுப்பிட்டி எம். பி. உரை

யாழ்ப்பாணம், வெள்ளி

“இன்றைய நிலையில் தமிழர்களும் குறிப்பாக மாணவர்களும் தமக்கென ஒரு தாயகம் வேண்டுமென்பதை மட்டும் மறந்துவிடக்கூடாது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் வளமற்ற வரண்ட பிரதேசங்கள் என்ற தப்பபிப்பிராயத்தை இனிமேலாவது மறந்து விடுங்கள். எம்மைச் சூழ்ந்துள்ள ஆழ்கடலும் ஆனையிறவு உப்பளமும் பொன் விளையும் நெல்வயலும் எம்மவர் தேவைகளைக் கண்டு அயல் நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப் போதுமானவையாகவிருக்கும். இந்த வகையில் நாம் எமது பொருளாதாரத்தை வளம் படுத்துவது அத்தியாவசியமானது என்பதை மாணவர்கள் இப்பொழுதிருந்து அறிந்து செயல்பட வேண்டும்.”

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தமிழ்க் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

“எமது கடல் செல்வங்களும், உப்பும் மட்டுமே எம்மவர் பொருளாதாரத்தை மேனிலையடையச் செய்யப் போதுமானவை என்பதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் எமது நாட்டில் செய்த ஆராய்ச்சி அறிக்கைகள் சான்று பகருகின்றன. ஆனால் இத்தொழில்களை மேற்கொள்ள எமது மனப்பான்மை மாற வேண்டும். எமது பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டும். எமது முதலீடுகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்குத் திருப்ப வேண்டும். இதைவிட்டு அரசாங்கத்தை நம்பியிருப்பது நாமே நம் வயிற்றில் குத்துவதாகும்.



# மாணவர் மலர்



## ஆக்கவேலைகளுக்கு அணுசக்தி

"அணுசக்தியை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் துறையில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது வரை நீர், நிலக்கரி போன்றவைகளே மின்சக்தியை உண்டாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன. ஆனல் அணுவைப் பிளந்து அதன் வாயிலாக வெளிவரும் பேராற்றலைக் கட்டுப்படுத்தி, வேண்டிய அளவு மின்சக்தியை நாம் இன்று பெற முடிகிறது. இவ்வகையான அணு ஆற்றலைப் பயன்படுத்திப் பெரிய பெரிய தொழிற்சாலைகள் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் இங்கிலாந்திலும் தோன்றியிருக்கின்றன. உலகெங்கும் மிகுதியாகக் கிடைக்கும் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி வேண்டியளவு சக்தியைப் பெற முடியுமெனக் கண்டறிந்துள்ளனர். இதையொட்டிக் குறிப்பாக ரஷ்யநாட்டில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. செயற்கைக் கோளில் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் வானெலிக் கருவிகள் போன்றவை தங்களுக்கு வேண்டிய மின்சக்தியை வானில் சூரியவெப்பத்தைக் கொண்டே பெறுகின்றன. பிற்காலத்தில் வானவெளிப் பயணத்துக்காகப் பயன்படுத்தப்படும் வானவெளிக் கப்பல்களில் எரி பொருள்களுக்குப் பதிலாகச் சூரிய வெப்பத்தையே பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது. இடைவிடாது கரையைத் தாக்கி வரும் கடல் அலைகளின் பேராற்றல் இது வரை வீணகியே வந்தது. ஆனல், இப்போது இந்த அலைகளின் ஆற்றலை கூடத் தக்க முறைகளினல் வேண்டிய சக்தியாக மாற்றிப் பயன் பெறலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பூமியின் கண் கிடக்கும் நிலக்கரியை எரித்துவிட்டு, எங்கு நிலக்கரிக்கு வறட்சி வந்து விடுமோ என்று ஏங்கியிருக்கும் மனித இனத்துக்கு இந்த அணுசக்தி, சூரிய வெப்பம், அலை கடலின் ஆற்றல் போன்றவை புத்துணர்ச்சியை அளிக்கின்றன."

## மலையேறும் மாணவன்

டார்சிலங், நவ. 23

எதரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறும் குழுவில் 18 வயதுப் பள்ளிக்கூட மாணவன் சுமான் டுபேயும் இடம் பெறுவான்.

நந்ததேவி சிகரத்தை அடையச் சென்ற குழுவில் இந்த இளைஞன் இடம் பெற்றிருந்தான்.

அடுத்த மார்ச் மாதம் ஜான் டயஸ் தலைமையில் அகில இந்திய எவரெஸ்ட் குழு அச்சிகரத்தை அடையும் முயற்சியை மேற்கொள்ளும்.

இமாலய மலையேறும் பயிற்சி நிலைய முதல்வர் திரு. கியான் சிங் இச்செய்தியைத் தெரிவித்தார்.

நந்ததேவிக்குச் சென்ற குழுவில் டுபே புரிந்த சாதனைகள் எவரெஸ்ட் செல்லும் குழுவிலும் இடம் பெற்றுத்தந்துள்ளன என்று திரு. சிங் கூறினர்.

சென்ற ஆண்டு போன பாதையிலேயே டயஸ் குழு செல்லும். இக்குழுவில் பன்னிரண்டு பேர் இருப்பார்கள்.

## பறவைகளின் திசை உணர்வு
### விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகள்

தேசம் விட்டுத் தேசம் செல்லும் பறவைகள் பற்றி இம்மலரில் சில வாரங்களுக்கு முன்னர் படித்தீர்கள். மனிதனுக்கில்லாத அற்புத திசை உணர்வு பறவைகளுக்குண்டு என்பதையும் இதனலேயே அவை தேசம் விட்டுத் தேசம் செல்கின்றன வென்றும் அறிந்தீர்கள் அல்லவா?

வட துருவத்திலிருந்து பறவைகள் 11,000 மைல் தூரத்துக்கப்பால் உள்ள அண்டாட்டிக் பிரதேசத்துக்குப் பறந்து செல்கின்றனவாம். அண்டாட்டிக் பிரதேசத்தில் வசந்த காலத்தைக் கழித்து விட்டு அப்பறவைகள் திரும்பவும் வட துருவத்துக்குச் சென்று அடைகாக்கும் காலமாகிய கோடைகாலத்தைக் கழிக்கின்றனவாம். இவ்வாறு தேசம் விட்டுத் தேசம் செல்லும் பறவைகள் திசையறிவுடன் தான் அவ்வாறு செய்கின்றன. இதற்கு விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகள் அத்தாட்சியாக உள்ளன. பறவையின் நுண்ணிய உணர்வுகளை எவ்வாறு விஞ்ஞானி அறிந்திருக்கமுடியும்? விஞ்ஞானிகள் செய்த ஒருசில பரிசோதனைகளை இங்கு படித்துப்பாருங்கள்.

குஸ்ராவ் க்ருமர் ' என்னும் ஜெர்மன் விஞ்ஞானியே முதன் முதலாக பறவைகள் தேசம் விட்டுத் தேசம் செல்வதுபற்றி ஆராயத் தொடங்கியவர். சூரிய வெளிச்சத்தின் உதவியைக் கொண்டே அவை அவ்வாறு செய்கின்றன என அவர் முடிவு செய்தார். பறவைகளைக் கூட்டில் அடைத்து வைத்து இவர் தமது பரிசோதனைகளைச் செய்தார். தேசம் விட்டுத் தேசம் செல்லும் காலம் வந்ததும் கூண்டில் அடைத்தபறவை ஆரவாரஞ் செய்யும் எனக் கண்டார். வெளிச்சத்தில் கூண்டை வைத்தபோது பறவை ஒரு திசையை மட்டும் நோக்கி ஆரவாரஞ் செய்ததையும் இருட்டில் வைத்தபோது திசை எதையும் நோக்காது கூண்டினுள் எங்கும் சுற்றி ஆரவாரம் செய்ததையும் அவர் அவதானித்தார். வெளிச்சத்தினல் பறவை திசையை அறிந்து கொள்கிறதென்றும் தான் செல்ல விரும்பும் திசையை நோக்கியே அது வெளிச்சத்தில் ஆரவாரிக்கின்றதென்றும் முடிவு செய்தார். சூரிய ஒளிக்குப்பதில் செயற்கை வெளிச்சமொன்றை ஏற்படுத்தித் தவருன திசைகளில் அது உதயமாகி அஸ்தமனமாகுவதாகப் பறவைகளுக்குக் காட்டினர். சூரிய வெளிச்சத்துக்குப் பதில் செயற்கை வெளிச்சத்தில் திசையை அறிய வேண்டிய பறவைகள் செயற்கை வெளிச்சம் காட்டிய தவருன திசையையே தாமும் நோக்கின. அதாவது சூரிய வெளிச்சத்தில் வட திசையை நோக்கி ஆர்ப்பாட்டஞ் செய்த பறவைகள் செயற்கை வெளிச்சம் காட்டிய வட திசையையே நோக்கி ஆர்ப்பாட்டஞ் செய்தன. சூரியனைக் கொண்டு பறவைகள் திசையறிந்து கொள்கின்றன என்பதை இப்பரிசோதனையால் ஜெர்மன் விஞ்ஞானி அறிந்து கொண்டார். ஆனல் எந்தக்கால நிலைகளிலும் பறவைகள் திசை கண்டு பிடிக்கின்றனவே! அது எப்படி? பறவைகள் பெருங் கூட்டமாக இரவு நேரங்களிலும் தேசம் விட்டுத் தேசம் செல்கின்றனவாம். சூரிய வெளிச்சத்தினல் திசையறியும் பறவை சூரிய வெளிச்சமில்லாத இராப்பொழுதில் எவ்வாறு திசையறிய முடியும்? பறவைக்கு அப்படியானல் திசையறிவுடன் காலநேர அறிவும் இருக்கத்தானே வேண்டும். இது பற்றி விஞ்ஞானிகள் பலர் ஆராய்ந்துள்ளனர். அதை பின்னர் கவனிப்போம்.

## ......படிக்கத் தெரிந்திருந்தால்......

ரா. பொன்ராசன்

பாப்பா:

சின்னச் சிட்டே சின்னச் சிட்டே<br>
சிரிக்கத் தெரியுமா? — உனக்குச்<br>
சிங்காரமாய் என்னைப் போல<br>
நடக்கத் தெரியுமா?

சிட்டு:

குட்டிப் பாப்பா குட்டிப் பாப்பா<br>
குதிக்கத் தெரியுதே — உனக்குக்<br>
கொஞ்ச மேனும் என்னைப் போல<br>
பறக்கத் தெரியுமா?

மற்ருெருபாப்பா:

பட்டுச் சிட்டே பட்டுச் சிட்டே<br>
பறக்கத் தெரியுதே — உனக்குப்<br>
பாப்பா என்னைப் போல ஆடிப்<br>
பாடத்தெரியுமா?

சிட்டு:

பெரிய பாப்பா பெரிய பாப்பா<br>
பேசத் தெரியுதே — உனக்குப்<br>
பேச்சை விட்டு என் போல் கூடு<br>
பின்னத் தெரியுமா?

பாப்பா:

பாடி ஆடிப் பறக்கும் சிட்டே<br>
உனக்கொரு கேள்வி — இந்தப்<br>
பாப்பாவைப் போல் உனக்கு நன்ருய்ப்<br>
படிக்கத் தெரியமா?

சிட்டு:

கண்ணிருந்தும் குருடு தான் நான்<br>
அருமைப் பாப்பாவே — கல்வி<br>
கற்க இயலாததனல்<br>
அன்புப் பாப்பாவே

படிக்க மட்டும் அறிந்திருந்தால்<br>
அருமைப் பாப்பாவே — இந்தப்<br>
பாரில் எனக் காருநிகர்?<br>
அன்புப் பாப்பாவே.

## குழந்தைகளுக்கான விளையாட்டுமைதானம்
### மணல் வீடு கட்டுவதில் விருப்பம்

குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானங்கள் அமைப்பதில் மேற்கு ஜெர்மன் அரசாங்கம் மிகவும் சிரத்தை காட்டி வருகிறது. புதிதாக நகரமைப்பு திட்டங்களில் விளையாட்டு மைதானங்களைக் கட்டாயம் அமைக்க வேண்டு என்று வற்புறுத்தி அரசாங்கம் விதிகளை அமைத்துள்ளது நல்ல திடகாத்திரமும் தேகாரோக்கியமுமுள்ள குழந்தைகள் நாட்டின் செல்வங்கள் என்ற உண்மையை ஜெர்மனியர் நன்கு உணர்ந்துள்ளது என்பதையே இது காட்டுகிறது.


தேசிய ஆரோக்கிய, சுகாதாரக் கமிட்டி இதற்காக ஒரு இயக்கத்தையே மேற்கொண்டு நடத்திவருகிறது. நல்ல விளையாட்டு மைதானம் எப்படி அமைய வேண்டும் என்பதை அறிய சில கேள்விகள் தயாரிக்கப்பட்டு பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுவர் சிறுமிகள் கருத்து அறிய அவர்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு

(7-ம் பக்கம் பார்க்க)

கிறிஸ்மஸ் மலிவு விற்பனை
ஆரம்பமாகும்
நாளை எதிர்பாருங்கள்

டயரும்ஸ்

மெயின் வீதி, யாழ்ப்பாணம்.



இங்கிலாந்திலுள்ள நார்தாம்படன்ஷயரில் ரோடர் அச்சு இயந்திரம் ஒன்றைப் பார்வையிடும் இந்திய அச்சுத் தொழில் தூதுகோஷ்டி ஒன்றைப் படத்தில் காணலாம்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

சனி 25-11-61

(செய்திகள் காலை 7-15 பகல் 2, இரவு 7-10.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம்' 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஆர். பொன்னுராஜா — வயலின்.

இரவு 7-15 திருமதி ரி. முத்துக்குமாரு — பேச்சு, 7-30 அம்பிகா தாமோதரம், ஞான சிவசுப்பிரமணியம் — பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 அறிவுச்சூழல், 9-45 லயவின்யாசம், 10-00 நேயர் விருப்பம்

ஞாயிறு 26-11-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர், பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கே. சிவப்பிள்ளை - பாட்டு, 5-45 திரைக்குரல், 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 என். பி. பாலச்சந்திரன் - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'பரிசு கிடைத்தது' - நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

சனி 25-11-61

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கோயமுத்தூர் எஸ். வி. அச்சுதன் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள் 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 கோயமுத்தூர் எஸ். வி. அச்சுதன் வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'காஞற்றின் செல்வம்' - நாடகம், 8-30 டெல்லிஅஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

ஞாயிறு 26-11-61

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-30 தஞ்சாவூர் என். வீராசாமி - கிளாரினட்டு, 8-15 சென்னை அஞ்சல்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 டி. எஸ். மரியானந்தம் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 காரைக்குடி வி. சங்கரன் - பாட்டு, 8-30 தஞ்சாவூர் என். வீராசாமி-கிளாரினட், 9-15 வாத்தியஇசை, 9-30 'எங்கிருந்து வருகுவதோ' - இசைநாடகம்.

## குழந்தைகளுக்கான விளை...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி "எனக்கு" ஸீ-ஸா விளையாட்டு சாதனம் வேண்டும்" நிறைய மணல் வேண்டும், ஓடிபபிடிக்க இடம் வேண்டும். என்று எழுதியிருந்தாளாம். ஒரு சிறுவன் "ஓட்டுவதற்கு விளையாட்டு மோட்டார் வண்டி வேண்டும் என்றும் பழைய வண்டியாக இருந்தாலும் பரவாயில்லை" என்று எழுதியிருக்கிருன்.

சுமார் 4,572 குழந்தைகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். மணலும் தண்ணீரும் விளையாடுமிடத்தில் அவசியம் இருக்க வேண்டும் என்பதைப் பெரும்பாலோர் தெரிவித்திருந்தனர். மணலில் வீடுகட்ட அவர்கள் விரும்புவதையே இது தெரிவிக்கிறது.

# காங்கேசன்துறையில் விளையாட்டு மைதானம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறையிலுள்ள பிரபல விளையாட்டுக் கழகங்களின் நீண்டநாள் கனவைப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடன் ஒரு பொது விளையாட்டு மைதானத்தை ஸ்தாபிக்கவேண்டிய ஒழுங்குகளைகாங்கேசன் துறை பட்டினசபை தற்பொழுது மேற்கொண்டுள்ளது. காங்கேசன் துறையில் ஒரு பொது விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு ஸ்தல ஸ்தாபன சேவைக்கமிஷன் நன்கொடைப்பணமாக 3000 ரூபாயைப்பட்டினசபைக்கு வழங்கியுள்ளது.

காங்கேசன் துறைப் பட்டின சபையின் புதிய அலுவலகத்திற்குப் பின்னுல் உள்ள நிலத்தில் இது அமைக்கப்படவிருக்கிறது. ஒருமாதகாலத்திற்குள் இவ்வேலைமுடிவடையும்.

## ரொக்கட் வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

சுன்னுகம் ரொக்கட் விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை ஸ்புட்னிக் டிக் பிரிவு விளையாட்டுக் கோஷ்டிக்கும் இடையில் காங்கேசன் துறை ரோயல் விளையாட்டுக் கழக சுற்றுப் போட்டியின் அமைப்பின் கீழ் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் ரொக்கட் கோஷ்டி 2-0 ஆட்டங்களினுல் வெற்றியீட்டியது.

## ஏரியில் படகு கவிழ்ந்தது

### குறைந்த பட்சம் 25 பேர் பலி

ஜோத்பூர், நவ. 22

பத்தேசாகர் ஏரியில் சுமார் 40 பேரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று இன்று கவிழ்ந்ததில் குழந்தைகள் உட்பட குறைந்த பட்சம் 25 பேராவது உயிரிழந்திருப்பர் என்று அஞ்சப்படுகிறது.



# சிங்களத் தகுதி பெருத

## அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வு நிறுத்தப்படும்

### இறுதியில் ஓய்வுபெற செய்யப்படுவர்

கொழும்பு, வெள்ளி

**வருகிற ஜனவரி 27-ந் திகதி நடத்தப்படவிருக்கும் 3-ம் வகுப்பு சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்தியடையாத அரசாங்க ஊழியர்கள் சகலருக்கும் சம்பள உயர்வு நிறுத்தப்படும். ஆனால் அரசாங்கத்தின் இந்த முடிவு விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களைப் பாதிக்காது.**

ன் பு செய்யப் பட்ட ஒரு முடிவின்படி சிங்கள உத்தியோகஸ்தர்கள் இவ்வாண்டு ஜூன் மாதத்திலும் தமிழ் உத்தியோகஸ்தர்கள் அடுத்த மாதக் கடைசியிலும் இக்கட்டத்தை அடைந்திருக்க வேண்டும். சகல அரசாங்க ஊழியர்களும் 3-ம் கட்டமான 7-ம் வகுப்பு தகுதியை 1964-ம் ஆண்டு அடைய வேண்டுமென்றும், தவறினல் சம்பள உயர்வு நிறுத்தப்படும் என்றும் அப்போது முடிவு செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது சம்பள உயர்வு நிறுத்தப்படுவதைத் தொடர்ந்து இந்த உத்தியோகஸ்தர்கள் ஓய்வு பெறும்படி செய்யப்படுவார்கள்.

## பினங்கு பெரியதபால் நிலையத்தில் களவு

பினங்கு, நவ. 20

இங்குள்ள தபால் நிலையத்தில் இரவில் யாரோ திருடர் கள்புகுந்து சுமார் 4,000டாலர் பெறுமான ரெஜிஸ்டர் தபால்களை களவாடியுள்ளனர்

களவாடப்பட்டுள்ளவைகளின் திட்டமான நஷ்டக்கணக்கு இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.

களவு போன தகவல் தெரிந்தவுடன் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டது.

காணப்படாத ரிஜிஸ்டர் தபால் சமான்களில் சில சிறு கடிகாரங்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

தபால் நிலையத்தின் பின்புற வழியாகத் திருடர்கள் உள்ளே புகுந்திருப்பதாக நம்பப்படுகிறது. அங்கு பல ஜன்னல் பலகைகள் அகற்றப்பட்டுள்ளன.

3 காவல்காரர்கள் இரவில் அங்கு காவல் கடமையாற்றிக் கொண்டிருந்துங்கூட, திருடர்கள் யாரும் அவர்கள் கண்ணில் படவில்லை என்று கூறப்படுகிறது. பொலிசார் தீவிர புலன் விசாரணை நடத்திவருகின்றனர்.

## 'உரிமைகளைப்பாதுகாக்க தொழிலாளர் ஒற்றுமை அவசியம்'

எட்டியாந்தோட்டை, வெள்ளி

"தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒற்றுமைதான் பிரதானமான ஆயுதமாகும். எனவே, தொழிலாளர் ஒற்றுமையாக இருக்க வேண்டும்".

இவ்வாறு பருசெல்லாப் பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர் ஏற்படுத்திய கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் என். எம். பேரேரா குறிப்பிட்டார். டாக்டர் பெரேரா மேலும் கூறியதாவது :

ஏழைத் தொழிலாளர் அரசாங்கத்திடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது. முதலாளிகளையும் பணக்காரர்களையும் அரசாங்கம் கஷ்டப்படுத்தவில்லை. ஆனல் அவர்களின் நலன்களைப் பாதுகாத்து வருகிறது".

## தேவை

ஆங்கில அறிவுடைய குமாஸ்தா தேவை. மற்றும் பிரதேச உத்தியோகஸ்தராகக் கடமையாற்றக் கூடிய ஆங்கில அறிவுள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அத்தாட்சிப் பத்திர நகல்களுடன் 10 சத முத்திரை இணைத்து விண்ணப்பிக்கவும்.

ஈழமாதா பெனிவிற் கோப்பரேஷன், 41, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி 1962-ம் ஆண்டு பிரவேசப் பரீட்சை

மேற்படி கல்லூரியில் 1962-ம் ஆண்டில் சேரவிரும்பும் மாணவர்களுக்குரிய தேர்வுப் பரீட்சைக்கான விண்ணப் பத்திரங்களை முத்திரையொட்டிய தபாலுறையை அனுப்பி கல்லூரி அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பப் பத்திரங்கள் டிசம்பர் 2-ந் திகதிக்குப் பின் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. பிரவேசப்பரீட்சை டிசம்பர் 6-ந்திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

அதிபர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

## "சர்வகலாசாலைக்கு மான்யம் போதாது"

கொழும்பு, வெள்ளி

சர்வகலாசாலைக்கு அளிக்கப்படும் மான்யம் மிகவும் பற்றுக்குறையாக இருப்பதாக இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. வி. வி. டி' சில்வா கூறினர்.

## பெட்ரேல் விலை 2 சதம் குறைந்துள்ளது

கொழும்பு, வெள்ளி

இங்குள்ள மூன்று பெட்ரோல் கம்பனிகள் கலன் ஒன்றுக்குப் பெட்ரோல் விலை 2 சதம் குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளன. எஞ்ஜின் எண்ணையின் விலையும் கலன் ஒன்றுக்கு ஒருசத வீதம் குறைந்துள்ளது எனத் தெரிகிறது. ஷெல், ஸ்டான்டட், வக்கூம் கல்டெக்ஸ் ஆகிய மூன்று எண்ணைக் கம்பனிகளுமே இவ்வாறு எண்ணைவிலை குறைப்பு பற்றிப் பிரஸ்தாபித்துள்ளன.

ஈரான் எண்ணை விலை குறைந்துள்ள காரமாணமாகவே இங்கும் விலைகுறைக்கப்பட்டுள்ளதாக இக்கம்பனிகள் கூறியுள்ளன.

## சிங்களத்தில் தந்தி மேலும் வசதிகள்

கொழும்பு, வெள்ளி

சிங்கள மொழியில் தந்தி அனுப்பும் வசதிகளை மேலும் பல தபால் கந்தோர்களில் ஏற்படுத்த தபால் தந்தி இலாகா ஒழுங்குகள் செய்து வருகிறது. கொழும்பு, மிரிகம, வியாங்கொடை, பிலியந்தலை ஆகிய நாலு இடங்களில் இப்போது இவ் வசதிகள் உள. சிங்கள மொழியில் தந்திச் செய்திகளை அனுப்புவதற்கான பயிற்சியை 10 பேருக்குத் தபால் தந்தி இலாகா அளித்துள்ளது.

சிங்கள மொழியில் தந்திகளை அனுப்புவதற்கு உபயோகப் படுத்திக்கொள்வதற்கென யப்பானிலிருந்து ஒரு 'டெலிப் பிரிண்டர்' யந்திரத்தைத் தபால் பகுதி வருவித்துள்ளது. அடுத்த மார்ச் மாதம் இந்த டெலிப்பிரிண்டர் இங்கு வந்து சேருமெனத் தெரிகிறது.

## கட்டுரை பேச்சுப் போட்டி முடிவுகள்

காத்தான்குடி, வெள்ளி

காத்தான்குடி, பட்டின வட்டாரத்தைச் சேர்ந்த முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியைப் பட்டின சபை ஒழுங்கு செய்திருந்தது. வெற்றி பெற்றவர்களுக்குக் காத்தான்குடி பட்டினசபைத் தலைவர் ஜனப் எம். ஐ. எம். காசிம்ஹாஜியார் பரிசுக்ளை வழங்கினர்.

போட்டிமுடிவுகள் வருமாறு:

**கட்டுரைப்போட்டி**

சிரேஷ்ட பிரிவு (ஆண்கள்) 1- எம். மஹ்றூப், 2- எம். கே. எம். அலியார், 3- கே. முகைதீன்.

கனிஷ்ட பிரிவு (ஆண்கள்) 1- எம். எல். கசிமுத்தீன், 2- எம். ஏ. எம். இஸ்மாயில், 3- எம். வெள்ளத்தம்பி.

பெண்கள் 1- ஏ. அரிபா உம்மா, 2- எம். எம். சித்தியா பீபி, 3- எம். எம். ஆமீனு உம்மா.

**எழுத்துப்போட்டி**

சிரேஷ்ட பிரிவு (ஆண்கள்) 1- என். ஏ. றசூல், 2- எம். அப்துல் மஜீது, 3- என். ஏ. ஆதம்லெவ்வை.

கனிஷ்ட பிரிவு (ஆண்கள்) 1- எஸ்.எம். கலந்தர்லெவ்வை, 2- கே. எம். அலியார், 3- ஏ. சுல்தான்.

கனிஷ்ட பிரிவு (பெண்கள்) 1- ஏ.உகாஜரு உம்மா, 2-எம் மரியம் பீபி, 3- என். கச்சி உம்மா.

## இன்று பாடசாலை அதிபர்கள் மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

பாடசாலை அதிபர்களைக் கொண்ட ஒரு மகாநாடு இன்று காலை 10 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். தேசிய சேவைத்திட்டம், சோவியத் வானவெளிவீரர் யாழ்ப்பாணம் வருவதுபற்றிய ஏற்பாடுகள் போன்ற விஷயங்கள் மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

---

கொழும்பு, வெள்ளி

பட்டதாரிகள் அரசாங்கத்தில் கட்டாயமாக சேவை செய்யவேண்டுமென்னும் மசோதாவை நிதிமந்திரி திரு.பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இன்று பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்

## சாவகச்சேரியில் திருக்கார்த்திகை விழா

சாவகச்சேரி, வெள்ளி

"இறைவனைக் காண்பதற்கு அவனருள் வேண்டும். முழுமுதற் பரம்பொருளை வழிபடுவதற்கு நம் முன்னோர், சிறந்த திருவுருவமாகக் கொண்டது ஒளியினையே. அன்றுதொட்டு இன்றுவரை ஒளிவழிபாட்டினைத் தமிழகம் கைக்கொண்டு ஒழுகிவருகின்றது."

இவ்வாறு சாவகச்சேரி சைவ சமய வளர்ச்சிச் சங்கத் தலைவர் திரு. கே. பொன்னுத்துரை திருக்கார்த்திகை விரதமும் தீப மதிமையும்பற்றிச் செருக்கல் பிள்ளையார் கோவிலில் பேசும்போது கூறினர்.

## பொய் வாக்குமூலம் அளித்தவருக்கு ரூ. 50 அபராதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுளிபுரம் வடக்கைச் சேர்ந்த கந்தர் சண்முகம் என்பவரது கைக்கடிகாரத்தைத் திருடியதாக யாழ்ப்பாணம் ஸ்டேஷன் ரோட்டைச்சேர்ந்த தம்பு குணரத்னம் என்பவர்மீது பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வல்லிபுரத்தினல் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம்மாஜிஸ்டிரேட் திரு. அரசவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இவ் கைக்கில் கந்தர் சண்முகம் பொய் வாக்குமூலம் அளித்ததாகக் கண்டு மாஜிஸ்டிரேட் அவருக்கு ரூ. 50 அபராதம் விதித்தார்.

## 28 சிங்கள சுருக்கெழுத்தாளர் வேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

கடந்த வாரம் 28 தற்காலிக சிங்கள சுருக்கெழுத்தாளர்களை திறைசேரி வேலைநீக்கம் செய்தது. அவர்களுக்கு ஒரு நாள் மட்டும் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டது. வேலை நீக்கம் செய்யப்பட்டதற்குக் காரணம் வேலைகள் இல்லாமலிருப்பதுதான் எனக் கூறப்பட்டது. குறித்த 28 சுருக்கெழுத்தாளர்களும் இதுபற்றி நிதி மந்திரியிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

## சிரேஷ்ட வழக்கறிஞர் மரணம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் பிரபல சிரேஷ்ட புரக்டர்களில் ஒருவரான 81 வயதுள்ள திரு. வி. சிவப்பிரகாசம் காலமானர். கடந்த ஆண்டு தான் அவர் தனது வழக்கறிஞர் தொழிலின் 50வது ஆண்டுவிழாவைக் கொண்டாடினர். யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த அவர் தமிழ் யூனியன் அங்கத்தினராயும், பல ஆண்டுகள் அதன் உபதலைவராகவும் இருந்தார்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் நாகேஸ்வரராவ் நடித்த எங்கள் செல்வி

•

யாழ்ப்பாணம் மனோகரா ஜெமினி கணேசன் நடித்த மணமேனமங்கையின்பாக்கியம்

•

சாவகச்சேரி தேவேந்திரா ஜெமினி கணேசன் நடித்த களத்தூர் கண்ணமமா


இப்பொழுது திரையிடப்படுகிறது!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த

25.11.61




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன் நடித்த

மணமேனே மங்கையின் பாக்கியம்


இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.